2003

# எழுகதிர்

யா/வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி
மத்திய மகா வித்தியாலயம் (வேலணை மத்திய கல்லூரி)
பழைய மாணவர் சங்கம் கொழும்பு
10ம் ஆண்டு நிறைவு முத்தமிழ் விழா மலர்

25.01.2004

372.06
எழுக
SL/PR

# SVS

## WHITE CRYSTAL Sugar

පිරිසුදු සීනි

சுத்தமான சீனி



SELVA VINAAYAGAR STORES

SVS

## Selva Vinaayagar Stores

**No.22, Newnham Square, Colombo -13.**
**Tel : 0777-780265, 0777-7796625, 0777-178433, 2451607, Fax : 2478659.**

யா/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி

மத்திய மகாவித்தியாலயம்

(வேலணை மத்திய கல்லூரி)

பழைய மாணவர் சங்கம் – கொழும்பு

10ஆம் ஆண்டு நிறைவு முத்தமிழ் விழா மலர்

**2004**

# எழுகதிர்

**25.01.2004 ஞாயிற்றுக்கிழமை**

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

- சி. சுப்பிரமணிய பாரதியார்-

# நிகழ்ச்சி நிரல்

இடம் : சரஸ்வதி மண்டபம், லோறன்ஸ் ரோட்
பம்பலப்பிட்டி, கொழும்பு - 04

காலம் : 25.01.2004 ஞாயிறு மாலை 5.00 மணி

| | | |
|---|---|---|
| 1. தமிழ்த்தாய் வாழ்த்து | | |
| 2. கல்லூரிக்கீதம் | | |
| 3. வரவேற்புரை | : | திருமதி.தி.பாலகுமாரன் |
| 4. தலைமையுரை | : | சங்கத்தலைவர் திரு.இ.சுந்தரமூர்த்தி (முன்னாள் பிரதி இயக்குனர் சுங்கத்திணைக்களம்) |
| 5. பிரதம விருந்தினர் உரை | : | திரு.வி.ரி.தமிழ்மாறன் சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 6. சிறப்புரை | : | கல்லூரி அதிபர் திரு.பொ.அருணகிரிநாதன் BA(Hons) Dip in Edu SLPS (Grade) M.E.D |
| 7. வெளியீட்டுரை | : | பேராசிரியர் கா.பொ.இரத்தினம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - தீவகம்) |
| 8. பாட்டு | : | செல்வி வேல்விழி சிவசுப்பிரமணியம் |
| 9. மிருதங்கம் | : | செல்வி சிந்துஜா ஸ்ரீரங்கநாதன் |
| 10. வயலின் | : | திருமதி.சர்மிளா கமலேஸ்வரன் |
| 11. இசைப்பாடல் | : | செல்வி வைஷ்ணவி பிரணஹர்த்திஹரன் |
| 12. நாடகம் | : | குழந்தை ம.சண்முகலிங்கத்தின் **"மனத்தவம்"** |
| 13. நெறியாள்கை | : | சோ.தேவராஜா |
| 14. உதவி | : | வ.சிவஜோதி |
| 15. மேடை நிர்வாகம் | : | பொ.கோபிநாத் |
| 16. நன்றியுரை | : | திரு.ஈச்ன் சபேசன் |

# கல்லூரிக் கீதம்

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்
வாழ்க பாடசாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

ஆழி சூழும் ஏழு தீவும்
அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்
அன்பு ஒளியைக் காட்டும் வழியே
ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஓங்கும் கொள்கை வழியே
குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாளும் நல்கி
நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
ஞானம் சீலம் நாடு எங்கும்
நல்கி மல்கிப் பெருகவே
மான வீர மாணவர்கள்
வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
திளைத்து நாங்கள் போற்றுவோம்
அன்பு ஆசார் அதிபர் கூடி
ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோடாங்கிலத்தை
ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்
போற்றுவோம் போற்றுவோம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்.

# நுழைவாயில்.....

வேலணை சேர்வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 10 வது ஆண்டு நிறைவில் 'எழுகதிர்' இரண்டாவது மலர் உதயமாகிறது. முன்பு ஏழு தீவுகளையும் தன்னோடு அணைத்து ஒளி பரப்பியவள், இன்றும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றாள். போர்ச்சூழலால் சிறிது நலிவுற்றாலும் அச்சூழலினால் உலகெங்கும் பரந்து, ஞானம், சீலம், மானம், வீரம் மிக்க அவள்புதல்வர்கள் தாம் இருக்கும் இடமெல்லாம் விழா எடுக்கின்றனர். கல்லூரி அன்னையின் பெயரால் ஒன்று கூடுகின்றனர், களிக்கின்றனர், சகோதர உறவுகளைப் புதுப்பிக்கின்றனர், சிந்திக்கின்றனர், செயலாற்றுகின்றனா, அன்னையின் புகழ்பரப்புகின்றனர். தமிழ்க் கலை, பண்பாடு புதுமெருகு பெறுகிறது. ஒற்றுமையே பலம். எமது சங்கம் எடுக்கும் முத்தமிழ் விழாவின் அடையாளமே 'எழுகதிர்'. மலர் வெளியீடு என்பது விழா நடந்தேறியதற்கான அடையாளம்மட்டுமல்ல. ஒரு கல்லூரியின் வளர்ச்சி அதன் மாணவரின் உயர்ச்சியில் தங்கியுள்ளது. விழா மலர்களில் பொதிந்து இருக்கும் மூத்த தலைமுறையினரின் அனுபவங்கள், செயற்பாடுகள் என்பன அக்கால கல்விச்சமூதாயத்தின் சிறப்பு, ஆசிரிய மாணவ பிணைப்பு, பழைய மாணவரின் கடமை உணர்வு, உலகளாவியரீதியில் அவர்களின் செயற்பாடு, தீவகத்தின் சமூகபொருளாதார நிலை, அதன் மாற்றங்கள், மக்களின் விழுமியங்கள் இன்னோரன்னவற்றை இளையதலை முறையினர் அறிய உதவுகின்றன. இலக்கியமும் வரலாற்றை அறிய உதவும் ஆதாரங்களுள் ஒன்று. அதன்கண்ணுள்ள வரலாற்று தடங்கள் யாவருக்கும் பயன்படக்கூடியவை.

கல்லூரி அன்னை பொன்விழா கண்டவள். இன்று நாம் எமது சங்கத்தின் பத்தாவது ஆண்டு விழா எடுக்கின்றோம். யுத்தச் சூழலால் அன்னை நிலைகுலைந்து, இடம் பெயர்ந்து, அல்லலுற்ற போது அன்னையின் மூத்ததலைமுறையினர் விழித்தெழுந்தனர். தம் கடமையை உணர்ந்தனர். பழையமாணவர் சங்கங்கள் அமைத்தனர். அவற்றின் மூலம் ஒன்று கூடி அன்னையை ஆதரித்தனர். இதனால் இடம் மாறியபோதும் அன்னை உரமுற்றுப் புகழ்பூத்தாள்.

போர்ச்சூழல் காரணமாக உலகளாவிய பழைய மாணவர் சங்கங்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளமுடியாதநிலையில் கல்லூரிச்சமூகம் இருந்தது. பலசமயங்களில் அவர்களுக்கிடையே ஒரு ஊடகமாக எமது சங்கம் பணியாற்றியது. பொறுப்பும் நம்பிக்கையும் வாய்ந்த தலைமைகள் இருந்தமையும் இதற்கு ஒருகாரணமாகும்.

இன்று இம் மலரை அன்னைக்கு அர்ப்பணிக்கின்றோம். காலத்தால் அழியாமல் நிலைத்து நிற்பதாலும் சமுதாயத்திற்கு நலன் பயப்பதாலுமேயே எழுத்தின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. 'எழுகதிர்' ஒளி வீச தமது உழைக்கும் நேரங்களையும் ஒதுக்கிவிட்டவர்கள் பலர். விளம்பரம் சேகரித்தவர்கள், நிதி உதவியவர்கள், பழையமாணவ சகோதரர்களை ஊக்குவித்தவர்கள், ஆக்கங்கள் தந்துதவியவர்கள் யாவருமே நன்றிக்குரியவர்கள். இது அவர்கள் கடமையுமாகும். உயர்த்திய ஏணியை மறந்தவர்களும் உண்டு.

குறுகிய நேரத்தில் இம் மலர் வெளிவர உழைத்தவர் திரு.சிவசாமி தயாபரன் அவர்கள். கல்லாமற் பாதி குலவித்தை என்பதை இவரில் காணமுடிந்தது. மலர் திறம்பட அமைய உதவிய 'விகடன் பிறின்ரர்க்கும் இதய பூர்வமான நன்றிகள்.

மலர்க்குழு சார்பாக
திருமதி.வேதவல்லி அரசரத்தினம்

பிரஷ்ட பூஷணம் சிவாகமஞானபானு
பிரதிஷ்ட கலாநிதி
சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
ஆதீன குரு ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தானம் - நயினை

"Pirathishta Bhooshanam, Sivagamagnanabhanu"
Pirathishta Kalanithi
Sivacharya Swaminatha Parameswara Gurukkal
*ADINA CHIEF PRIEST*
Sri Nagabhooshani Ambal Devasthanam
NAINATIVU

# ஆசிச் செய்தி

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

-திருக்குறள்-

சப்ததீவுகளில் சிறந்ததான லைடன்தீவில் சிறப்புற விளங்கும் கல்லூரி வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயமாகும். சைவத்துக்கும், தமிழுக்கும், சிறந்த நற்பண்பாட்டுக்கும் பெயர் பெற்றது வேலணையூர். ஆசார அனுஸ்டானங்களை பாரம்பரியமாகப் பேணி வருபவர்கள் வேலணையூர் மக்கள். இத்தகைய சூழ்நிலையில் உருவாகியுள்ள இக் கல்லூரி சிறந்த நல்மாணவர்களை உருவாக்கிவருவது கண்கூடு. சைவசமய ஒழுக்காற்று விழுமியங்களைப் பேணுவதற்கும் மேலும் சிறப்புறுத்துவதற்குமாக கல்லூரி நிர்வாகத்தால் கல்லூரிமுன்றலில் சிவகாமி சமேத நடராஜப் பெருமான் ஆலயம் அமைத்து, அங்கு சைவசமயக் கிரியைகளை நடத்திவருவது பாராட்டுக்குரியது. இதனால் சமயப்பண்பாடுகளிள் இளமையில் இருந்தே மாணவர்களிடம் வளர்ந்து வரும்.

இக்கல்லூரி சிறந்த நல்லாசிரியர்களைக் கொண்டிருப்பதால் அதன் கல்வித்தரம் உயர்ந்துவருவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இக்கல்லூரியின் பல மாணவர்கள் நம் நாட்டின் சகல பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் நற்சேவை புரிந்துவருகிறார்கள். நீதியான நேர்மையான மக்கள் சேவையை அளித்து வருகிறார்கள் நம் நாடும் உயர்வடைகிறது. நம் நாட்டின் நற்பெயரும் வெளி நாடுகளில் ஓங்குகிறது.

இக்கல்லூரிக்காக கொழும்பில் இயங்கும் பழைய மாணவர்சங்கம் நடத்தும் சேவைகள் போற்றுதற்குரியன. இக்கல்லூரியும் பழைய மாணவர்சங்கமும் சகல நலன்களும் பெறவேண்டுமென்று, அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருப்பாதங்களை வணங்கி வாழ்த்துகிறேன்.

நல்வாழ்த்துக்கள்

**சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்**
**51/33 A, சுவர்ணா வீதி**
**கொழும்பு - 06**

Senthamilk Kalaimany, Thamilch Chanror
**DR.K.P.RATNAM**
B.A.Hons (Lond), M.A.,B.O.L.,(Madras),
D.Cult (W.U.) Litt D (WAAC)
Ex-Member of Parliament, Sri Lanka
(President, World Thirukkural Society)
கொழும்பு - 06

தீவக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் கா.பொ. இரத்தினம் வழங்கிய

# ஆசிச் செய்தி

வேலணை மத்திய கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தினர் தங்கள் கல்லூரியை ஓங்கி மிளிரச் செய்வதற்கு ஆற்றிவரும் பெரும் பணிகள் யாவருடைய பாராட்டுக்குமுரியன. அவர்களுடைய பணிகளுக்கு யாவரும் உதவியும், பொருளும் நல்கி அவர்களை ஊக்குதல் வேண்டும்.

கல்லூரி என்ற பெயருக்கு மத்திய மகாவித்தியாலயம் என்ற பெயர் ஈடாகாது மத்தியமகாவித்தியாலயக்கல்வி பாடசாலைக் கல்வியாகவே கருதப்படும். எனவே பல்கலைக்கழகத்துக்கு முன்னைய கல்வி நிலையமாக எங்கும் நிலைத்து நிற்கும். கல்லூரி எனும் பெயரை வேலணை மத்திய மகாவித்தியாலத்துக்குச் சூட்டி அதனை வேலணை மத்தியகல்லூரி என முனைந்துள்ள அவர்களின் பணி யாவராலும் போற்றுதற்குரியது. இனி வேலணை மத்திய கல்லூரி எனும் பெயரே நிலைத்து நிற்கவேண்டும்.

எந்த நாட்டின் பல்துறைமுன்னேற்றமும் அந்நாட்டு உயர் கல்வி நிலையங்களையே பொறுத்துள்ளது. செவ்வாய்க்கிரகத்துக்கு ஒருவரை அனுப்பமுயலும் அமெரிக்காவின் ஆற்றலுக்கு அடிப்படை அந்நாட்டின் ஆராய்ச்சிக் கல்வி நிலையங்களேயாகும். எனவே தம் நாட்டை, தம் இனத்தை எல்லாத்துறையிலும் ஓங்கச் செய்ய முனைவோர் தங்கள் நாட்டுக் கல்வி நிலையங்கள் எல்லாத்துறையிலும் உயர்ந்து ஓங்குதற்கு ஆவனசெய்தல் வேண்டும்.

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் ஒற்றுமையும் பேருழைப்பும் தங்கள் கல்லூரியை ஈடிணையற்றதாக மிளிரச் செய்யும் எனும் நம்பிக்கையைக் கொடுக்கின்றன.

"ஆக்கம் அதிர்வினாய்ச் செல்லும் அசைவு இலா
ஊக்கம் உடையான் உழை"

தமிழ்மறை

எமது சங்கத் தலைவர் திரு.இ.சுந்தரமூர்த்தி வழங்கிய

# ஆசிச் செய்தி


எமது சங்கம் தனது 10ம் ஆண்டு நிறைவினையொட்டி முத்தமிழ் விழாவினையும், சிறப்புமலர் வெளியீட்டினையும் செய்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இச்சந்தர்ப்பத்தில் எமது சங்கத்தினை உருவாக்கிய பெரியாரையும் நினைவு கூறல் மிகவும் பொருத்தமானது. 1992ம் ஆண்டு யாழ்ப்பாணத்து மக்கள் அனுபவித்த வேதனைகளை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இந்தக்கஷ்டமான காலத்தில் 30.08.92இல் எமது சங்கத்தை காலம் சென்ற திரு.பொ.கேதாரநாதன் பழையநகரசபைக் கட்டடத்தில் ஆரம்பித்து வைத்தார். இவர் நமது கல்லூரியின் பழைய மாணவர், பின்னர் அதிபராகவும் கடமையாற்றியவர்.

எமது நிர்வாகசபை அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் அனைவரின் ஒற்றுமையாலும் கடும் உழைப்பினாலும் தான் நாங்கள் இவ்விழாவை சிறப்பாக கொண்டாட முடிந்தது. எங்களுடைய சங்கம் சென்ற ஆண்டில் "ஆர்கொலோ சதுரர்" எனும் நாடகத்தை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் மேடையேற்றிவித்தது. இதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஆண்களும், பெண்களுமாக அறுபத்திரண்டு ஆற்றுகையாளர்களை கொழும்பிற்கு வரவழைத்து, கொழும்பு வாழ்தமிழ் மக்கள் பல ஆண்டுகளுக்குப் பின் யாழ்ப்பாண நாடகத்தை இரசிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. இந்நாடகத்தைப் பார்த்தவர்கள் அனைவரும் இதனை பாராட்டியது குறிப்பிடத்தக்கது. இந்த நாடகத்தை மேடையேற்றுவதற்கு முன்னின்று உழைத்த எமது நிர்வாகசபை அங்கத்தவர்கள் திரு.சி.தயாபரன், திரு.சி.வரதலிங்கம், திரு.V.விஜயகுமாரன், திரு.தி.திருஞானசம்பந்தன், திரு.சி.குகநாதன், திரு.து.அருந்தவநாதன், திரு.பொ.சிவமணி ஆகியோர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்காவிடில் நான் எனது கடமையில் இருந்து தவறியவன் ஆவேன்.

கடந்த வருடத்தில் எமது சங்கம் கல்லூரிக்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் விளையாட்டு உபகரணங்களையும், உடுப்புகளையும் அனுப்பிவைத்தது. அத்துடன் சுற்றுமதில் கட்டுவதற்கு ரூபா ஒரு இலட்சத்தை வழங்கியது. அத்துடன் எமது வேண்டுகோலை ஏற்று எமது பழைய மாணவரும் கொழும்பு, யாழ்ப்பாணத்தில் பிரபல தொழில் அதிபருமான திரு.ப.வரதராஜசிங்கம் அவர்கள் இலட்சணக்கான ரூபாய் பெறுமதியுடைய சீமெந்தினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர் மேலும் தேவையான சீமெந்தினை தந்துதவுவதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருக்கின்றார். இவருக்கு எமது சங்கத்தின் மனமார்ந்த

நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் திரு.த.வாசவன், திரு.ந.மோகன் ஆகியோர் ரூபாய் இரண்டுலட்சத்து எழுபதுனாயிரம் பெறுமதியான கதிரைகளை பாடசாலைக்கு வழங்கியுள்ளனர். இவர்களுக்கும் எமது சங்கத்தின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்லூரிகள் அரசாங்கத்தின் உதவியுடன் மட்டும் அபிவிருத்தியடைவது மிகவும் கடினமான விடயம் கல்லூரி வளர்ச்சிக்கு அதன் பழைய மாணவர்கள் அங்கம் வகிக்கும் சங்கங்களின் ஊடாக தாராளமாக உதவவேண்டும். இவ்விடயத்தில் கனடா கிளை முன்னணியில் திகழ்கின்றது என்பதை கூறியேயாகவேண்டும். காலம் சென்ற அதிபர் அமரர்.வே.தம்பு ஞாபகார்த்த நிதிக்கு உதவும்படி பழைய மாணவர் சங்கங்களை வேண்டிக் கொள்கின்றோம். அரசாங்கத்தின் முடிவின்படி வங்கிவட்டி வீதம் குறைந்தபடியால் மாணவர்களுக்குக் கொடுத்துவந்த புலமைப் பரிசில் தொகையை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் பாதிப்படைந்து இருக்கிறார்கள். இவர்களுக்கு




முதலில் கொடுத்து வந்த தொகையைக் கொடுப்பதற்கு எமது வைப்புப் பணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

வேலணை மத்திய கல்லூரியில் நான் பயின்ற காலப்பகுதி என்பது எனது வாழ்வில் மறக்க முடியாத காலமே என்று சதாரணமாக கணிப்பில் அடக்கிவிடக் கூடிய வருடங்களைக் கொண்டதாக இல்லை. உண்மையில் அந்தக் காலப்பகுதி தான் என் வாழ்வையே உருவாக்கியது என்பது எனக்கு மட்டுந் தெரிந்த விடயமாகும். அதை இன்று வெளிப்படையாக சொல்லச் சந்தர்ப்பம் கிடைத்தது பெருமகிழ்ச்சி தருவதாக உள்ளது.

பாடசாலைக் கல்வி ஆரம்பம் என்பது ஒவ்வொருவருக்கும் இன்னொரு உலகத்தைக் காட்டும் தொடக்க விழாவாக அமைவதுண்டு. பெற்றோர், குடும்பம் என்ற பிறந்த நாள் தொட்ட பந்தத்துக்கு அப்பால் புதியதொரு சமூகத்துக்குள் எம்மைப் பிரவேசிக்க வைப்பதும் பாடசாலை வாழ்க்கை தான். அந்த நினைவுகளும் அவை பதித்த தடங்களும் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எம்மிலிருந்து அகற்றிவிட முடியாதவை என்பதே யதார்த்த உண்மையாகும். எல்லா வேளைகளிலும் அவை சந்தோஷ சாம்ராச்சியத்தின் வருடல்கள் என்று நாம் கனவுகாண்பதும் அவசியமற்றது.

எல்லோருக்கும் ஏதோவொரு வகையில் ஒரே விதமான அனுபவங்கள் கிடைப்பது என்பது பள்ளிக்கூட வாழ்க்கையில் தான். இதற்குக் காரணம் நாம் எல்லோரும் அந்தக் காலப் பகுதியிலேயே நிஜமாகவும் சுத்தமாகவும் நாமாகவே இருந்திருக்க முடிகின்றது என்பதேயாகும். இந்தக் காலப் பகுதியை வீணாக்கிவிட்டு அதற்காகப் பின்னர் ஏங்குகின்ற தவறை நாம் எல்லோரும் பல தடவைகளில் எம்மை அறியாமலே செய்வதுண்டு. ஆனால் அதில்கூட ஒரு சுகமுண்டு என்பதைப் பின்னர் நாம் சந்தித்து எமக்குள் பரிமாறிக் கொள்வதுமுண்டு.

அந்த வகையில், வேலணை மத்திய கல்லூரி எனக்குத் தந்த அனுபவங்கள் என்றைக்குமே இதமானவை என்று அறிவதற்கு நான் முதலில் பக்குவப்பட வேண்டியிருந்தது. விடுதி வாழ்வை வெறுத்து பாடசாலைக்கு வராமல் ஒளித்துத் திரிந்த நாட்களையும் அப்படியிருந்தும் ஆசிரியர்கள் என்மீது காட்டிய "செல்லம்" எந்தளவுக்கு என்னைப் பழுதாக்கியது - எந்தளவுக்கு என்னை ஆளாக்கியது என்பதையும் இப்போது இரை மீட்டிப்

பார்க்கின்றேன். அந்த வசந்த கால நினைவுகள் சுமப்பதற்கு மட்டுமே சுவையாகப் போய்விட்ட கனவுகள்.

இந்தக் கலைக் கோவிலில் எனது சக மாணவர்களது பெயர்களையும் நான் சந்தித்த அத்தனை ஆசிரியர்களது பெயர்களையும் இன்றும் மனப்பாடமாக என்னால் ஒப்புவிக்க முடிகின்றது என்றால் அதற்கு அடிப்படையாக அமைந்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் பற்றி நீங்கள் தாராளமாக ஊகித்துக் கொள்ளலாம்.

எனது பிறந்த வீடு என்று எப்போதுமே பெருமையுடன் சொல்ல வைக்கும் இந்தக் கோட்டம் என்னைப் பொன்று எத்தனையோ பேருக்கு இராஜ பாட்டை அமைத்துக் கொடுத்துள்ளது. அந்த நன்றிக் கடனுக்காக எதையும் செய்யத் தயாராக என்னைப் போலவே இன்னும் எத்தனையோ பேர் தயாராக இருப்பதையே பழைய மாணவர் சங்கத்தின் இந்தப் பத்தாவது ஆண்டு விழாவும் அதையொட்டிய முத்தமிழ் விழாவும் முரசறைந்து சொல்கின்றது. இந்த விழா சிறக்கவும் எங்கள் கலைக் கோவில் மேலும் மேலும் தழைத்து நிற்கவும் பிரார்த்திப்போமாக.

நன்றி!

வி. ரி. தமிழ்மாறன்
சட்டத்துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்,
கொழும்பு -3
தை 15, 2004

Professor P.Balasundrampillai
B.AHons.(Cey), Ph.D.(Durham
Senior Professor of Geography,
University of Jaffna,
(Former vice-chancellor, July 1996-March 2003
University of Jaffna)

Res : 117/7, Ambalavanar Road,
Athiady,
Jaffna.
Tel : 094-21-2222322

# ஆசிச் செய்தி

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலய பழையமாணவர்கள் எடுக்கும் விழாவிற்கு வாழ்த்துச் செய்தி கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வித்தியாலயம் 1946இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வு வரை தீவுப்பகுதி மக்களுக்கு கல்வித் துறையில் மிகப் பெரிய பணிசெய்துள்ளது. இங்கு கல்வி கற்ற பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் மிகச்சிறந்த கல்வியைப் பெற்றதுடன் நம் நாட்டிலும், பல்வேறு நாடுகளிலும் சிறந்த நிலையிலுள்ளனர். இக்கல்லூரி 1991களுக்கு முன்னர் தனக்கேயுரிய கல்விப் பாரம்பரியத்தைக் உருவாக்கியிருந்தது.

1991இல் 2000 மாணவர்களைக் கொண்டும் பல்வேறு நிலையில் மிக உன்னதமாயிருந்த கலைக்கோயில் தீவகமக்களின் ஒட்டுமொத்தமான இடப்பெயர்வில் நிலை குலைந்தது. இடம்பெயர்ந்து கொட்டடி நமசிவாய வித்தியாலத்திலும், பின்னர் கந்தர்மடத்தில் தனியார் வீட்டிலும் இயங்கியது. 1995இல் யாழ்ப்பாணமக்கள் இடப்பெயர்வுடன் சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்து 1996இல் மக்கள் வேலணைக்கு திரும்பிய பின்னர் தனது சொந்த இடத்தில் இயங்கமுடியாது வேலணை சரஸ்வதி வித்தியாலத்தில் இயங்கியது முன்னாள் அதிபர் கணேசலிங்கத்தினதும் மற்றும் பலரது முயற்சியாலும் தற்பொழுது சொந்த இடத்தில் இயங்குகின்ற பொழுதும் மாணவர்கள் குறைவாக இருப்பதுடன் உயர்தர வகுப்புகளை முன்னெடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாகவுள்ளது.

இக்கல்லூரி 1991க்கு பின்னர் நீண்ட, துயரங்கள், இடர்பாடுகளை சந்தித்த பொழுதும் தீவுப்பகுதி மக்களின் எதிர்கால கல்விவளர்ச்சி இந்நிறுவனத்தின் சிறந்த செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது. ஆகவே இதன் வளர்ச்சியில் தீவு மக்கள் பழைய மாணவர்கள், அரசியல் தலைவர்கள், நலன் விரும்பிகள் யாவரும் இணைந்து துடிப்பாகச் செயற்படுவதே காலத்தின் தேவையாகும். பழைய மாணவர்களின் தன்னலமற்ற செயற்பாடுகளால் பல நன்மைகள் கிட்டட்டும்.

வளர்க கல்லூரி, வாழ்க பாழைய மாணவர்கள் சங்கம்

**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**புவியியல் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்**
**யாழ் பல்கலைக்கழகம்.**

# யா/ சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் – வேலணை

( வேலணை மத்திய கல்லூரி)

J/Sir Waitialingam Duraiswamy Madya Maha Vidyalayam- Velanai

(VELANAI CENTRAL COLLEGE)

உங்கள் இல: Your No.
எமது இல: Our No.

*வேலணை Velanai.*
*இலங்கை Sri Lanka.*
2003.12.30

## வாழ்த்துச் செய்தி

யா/ சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தின் (வேலணை மத்திய கல்லூரி) பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர் தங்கள் சங்கத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவை வெகுசிறப்பாகக் கொண்டாட இருப்பது குறித்து கல்லூரித்தாய் பெருமகிழ்வு அடைகிறாள்.

எங்கள் கல்லூரித் தாயின் பிள்ளைகள் உலகில் எங்கு வாழ்ந்தாலும் தங்களை வளர்த்து விட்ட கல்லூரித் தாயின் உயர்வுக்காக உழைத்து வருவது கண்டு நாம் பெருமிதம் அடைகிறோம். கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர் தமது பத்தாவது ஆண்டு கால வளர்ச்சிப்பாதையில் எமது கல்லூரியின் பன்முக அபிவிருத்திப் பணிகளில் பெரும்பங்காற்றியுள்ளீர்கள். உங்களை எங்கள் கல்லூரிச் சமூகம் நன்றியுணர்வுடன் நினைவில் இருத்தி உங்கள் உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புகிறது.

உங்களின் கல்விப்பணி மேலும் பல்துறை சார்ந்ததாக வியாபிக்க வேண்டும். எமது கல்லூரியையும் எமது பிரதேசத்தையும் மீளக்கட்டியெழுப்பும் பணியில் எம்மோடு சேர்ந்து நீங்களும் உழைக்க வேண்டும். உங்கள் ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் ஆதரவையும் என்றும் நாம் வேண்டி நிற்கின்றோம். உங்கள் பணி தொடரவும் உங்கள் சங்கத்தின் 10வது ஆண்டு நிறைவுவிழாவும் மலர் வெளியீடும் மிகச் சிறப்பான வகையில் நடைபெற எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானை வணங்கி வாழ்த்துக்கள் கூறி மகிழ்வடைகிறேன்.

P. Arunagirinathan

P. ARUNAGIRINATHAN
PRINCIPAL
J/Sir. Waithiyalingam Duraiswamy
M. M. V. - VELANAI

**PRINCIPAL**
**P. ARUNAGIR INATHAN**
**B.A (Hons), Dip. in Ed, M.Ed, SLPS 1**

**DEPUTY PRINCIPALS**
**Mrs. A. Kumarathasan**
B.A (Hons), Dip in Ed, SLTS -2-*II*
**S.Sivananthan**
**B.BA., Dip in Ed. SLTS- 2 *II***

## தீவகம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் வழங்கிய

# ஆசிச் செய்தி

யா/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலத்தின் பழைய மாணவர் சங்கம் - கொழும்புக்கிளை 10வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டும் அதன் பொருட்டு வெளியிடப்பட்டிருக்கும் சிறப்பு மலருக்காக ஆசிச்செய்தி வழங்குவதையிட்டும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கல்லூரியின் உயிர் நாடியாக இருப்பது பழைய மாணவர் சங்கம் என்றால் மிகையாகாது. கடந்தகால இடப் பெயர்வுகள் காரணமாகக் கல்லூரி சந்தித்த பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் தனது சொந்த இடத்தில் மீண்டும் புதுப் பொலிவோடு வளர்ச்சிகாண ஆரம்பித்திருப்பதற்கான பிரதான காரணியாக அமைந்தது பழைய மாணவர் சங்கத்தினுடைய உலகெங்கும் பரந்து கிடக்கும் கிளைகளின் தீர்க்க தரிசனமான, சிறப்பான, பாராட்டுதலுக்குரிய செயற்பாடுகளே. இந்த வகையில் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் செயற்பாடுகள் மிகவும் வரவேற்கக்கூடியதும், பாராட்டப்படவேண்டியதும், எல்லோருக்கும் முன்னுதாரணமாகக் காட்டக்கூடியதாகவுமுள்ளது.

இந்த நிலையில் கடந்த ஒரு தசாப்த காலமாக நிர்வாகிகளாக இருந்தவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தான் இக்கிளையின் வளர்ச்சிக்கு உந்துசகத்தியாக இருந்துள்ளன. இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும், பாராட்டுகளையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பத்தாண்டுகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்திருக்கும் தங்கள் கிளை கடந்த காலங்களைப் போன்று தொடர் செயற்பாட்டின் மூலம் எமது பிரதேசத்தில் வாழும் ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு தொடர்ந்து பக்க பலமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எதிர்கால சிறப்பான செயற்பாட்டிற்கு ஆசிகூறி நிறைவு செய்கின்றேன்.

"நன்றி"

**ஜே.எக்ஸ். செல்வநாயகம்**
**உதவி அரசாங்க அதிபர்**
**தீவகம் வடக்கு ஊர்காவற்துறை**

# வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கச்

# செயலாளரிடமிருந்து........

எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர் நடாத்தும் பத்தாவது ஆண்டு நிறைவு முத்தமிழ் விழாவிற்கும் அதனையொட்டி வெளியிடப்படும் மலருக்கும் எனது வாழ்த்தினைத் தெரிவிப்பதில் பெருமையும் மகிழ்வும் அடைகிறேன். கல்லூரி அன்னையின் அரை நூற்றாண்டு கால கல்விப்பணியில் அவர் சாதித்தது பலப்பல. விஞ்ஞான வளர்ச்சி விசுவரூபம் எடுத்ததன் பயனாக உலகம் சுருங்கிவிட்டது என்பார்கள். ஆனால் எங்கள் கல்லூரித்தாய் கல்விக்கு ஆற்றிய சேவையின் பயனாக உலக அரங்கெங்கும், திறமைகள், ஆற்றல்கள் மூலம் அன்னை கல்லூரியின் பெயரை நிலைநிறுத்தி உலகத்தினையே அவரின் காலடிக்கு கொண்டு சேர்த்திருக்கிறார்கள், அவரின் பிள்ளைச் செல்வங்கள் எனில் அது மிகையல்ல.

ஒரு கல்விச்சாலையின் வளர்ச்சி தனித்து அரசிடமோ அல்லது ஆசிரியர்களில் மாத்திரமோ தங்கியிருக்கவில்லை. இவர்களோடு கல்விச் சமூகம், பழைய மாணவர்கள் பெரும்பங்கு வகிக்கிறார்கள். 1991ம் வருடத்திய தீவகத்தின் பாரிய இடப்பெயர்வின் காரணமாக எங்கள் கல்லூரி சிதறுப்பட்ட நிலையிலே, யாழ் நகரிலே அதனை ஒருங்குசேர்த்து கல்லூரியின் தனித்துவத்தைக் காத்தது பழைய மாணவர்களின் அளப்பரிய பங்களிப்பே என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த வகையிலே புலம் பெயர் தேசங்களிலே கல்லூரித்தாயின் பெயரால் கிளைகளை அமைத்து சிறப்பாகச் செயற்பட்டு வரும் சங்கங்களுக்கு நிகராக கொழும்புக் கிளையின் செயற்திறனும் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. இதற்கு முற்று முழுதாக கொழும்புக் கிளையின் தலைவரும், அதன் நிருவாகிகளுமே உரித்துடையவர்கள். காலத்திற்குக் காலம் தகுதியான ஆலோசனைகளை வழங்குவதோடு, இயன்றவரை தனது தனிப்பட்ட ஆளுமையையும் பயன்படுத்தி கல்லூரியின் வளர்ச்சிக்கு, தலைவர் திரு இ. சுந்தரமூர்த்தி அவர்கள் ஆற்றிவரும் பணியினைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இதற்கு அழிக்கப்பட முடியாத உதாரணமாகத் திகழ்வது "அதிபர் தம்பு ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் திட்டம்" கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி திரு.ச. குலோத்துங்கம் அவர்களோடு இணைந்து திரு. இ. சுந்தரமூர்த்தி அவர்கள் வகுத்துப் பங்களிப்புச் செய்த இத் திட்டம் இன்று வளம் குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாகவிருப்பதை யாவரும் அறிவர். மேலும் கனடாக் கிளையின் உதவியோடு அமைக்கப்பட்டு வரும் கல்லூரி பாதுகாப்பு மதில்வேலைகள் விரைவில் பூர்த்தியாவதற்கு கொழும்புக்கிளை கணிசமான பங்களிப்பினைச் செய்ததுடன் கல்லூரிப் பழைய மாணவர் திரு. ப. வரதராஜசிங்கம் அவர்கள் 200 பொதி சீமெந்தினை முதற்கட்டமாகவும், தொடர்ந்தும் பங்களிப்புச் செய்ய இருப்பதற்கும் உறுதுணையாக நின்ற கொழும்புக் கிளையையும் அதன் தலைவரையும் நன்றியுடன் நினைவு கூர்வதோடு திரு. ப. வரதராஜசிங்கம் அவர்களுக்கும் தாய்ச்சங்கம் தனது நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறது. இவை தவிர்ந்து சிறுதுளிகள் பெருவெள்ளமாவது போல இக்கிளை ஆற்றிவரும் பணிகள் அளப்பல.

இச் சந்தர்ப்பத்திலே.......உலகெங்கும் இயங்கும் கிளைச் சங்கங்கள் கல்லூரிக்கு அத்தியாவசியமான வேலைத்திட்டங்கள் பலவற்றையும் நிறைவு செய்து தர ஆயத்தமாகின்றன என்ற நல்ல செய்தியை நன்றியுடன் தெரிவிப்பதோடு நாம் எதிர்பார்த்து நிற்கும் அவசியமான பணியொன்றினையும் சுட்டிக்காட்டுவது சாலப்பொருத்தமென நினைக்கிறேன். வரும் ஆண்டு ஆரம்பத்திலே கல்லூரியின் விடுதி இயங்குவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தி நிலையிலுள்ளன. இவ் விடுதியிலே தீவகத்தின் மாணவர்கள் தங்கிக் கற்கவுள்ளார்கள். இவர்களுக்கான உணவு, பராமரிப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியினையே அன்புடன் எதிர்பார்த்து நிற்கிறோம்.

நிறைவாக, தீவக மக்களின் கல்விப் பசியைப் போக்கி அவர்கள் எந்த இடத்திலும் தலை நிமிர்ந்து நிற்கும் வாழ்வினைத் தந்த கல்லூரியின் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முந்திய காலப்பகுதியினை எண்ணிப்பார்க்கிறேன். தம் நலம் கருதாது கல்விப் பணிக்குப் பெரிதும் தொண்டாற்றிய மதிப்பிற்குரிய அதிபர்கள் ஆசிரியப் பெருந்தகைகள் எனது நினைவுக்கு வருகிறார்கள். குறிப்பாக சுமார் 13 வருடங்கள் சேவையைத் தொண்டாகக் கருதி பணிபுரிந்த மதிப்பிற்குரிய பேரறிஞர் திருவாளர் வி.தம்பு அவர்களது காலம் இக் கல்லூரியின் பொற்காலம் எனலாம். வெள்ளை முயல்குட்டிகள் போல மாணவச் செல்வங்கள் சுதந்திரமாகத் துள்ளித்திரிந்து கல்விபெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்த காலம் அது. இலங்கையின் வேறெந்தக் கல்விக் கூடங்களுக்கும் இணையாக தலை நிமிர்ந்து நின்று கல்விப்பணி செய்த அந்தக் கல்விச் சாலையின் இன்றைய நிலை....? நான்கு பக்கமும் முட்கம்பி வேலிகளுக்குள் ஒடுக்கப்பட்டு, ஆசிரிய, மாணவர், பெற்றோரின் சுதந்திரம் பறிக்கப்பட்டு இருள் சூழ்ந்த நிலையிலுள்ளது. சூழ்ந்த இருள் விலக " கருணை ஒளியே வழிகாட்டு" அன்னையே! உன் பிள்ளைகள் என்றும் உன் பின் நிற்பார்கள்.

கல்லூரித்தாயின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவி வரும் உங்கள் சங்கம் தொடர்ந்தும் தனது பங்களிப்பினைச் செய்யும் என்பது எமது அசையாத நம்பிக்கை. இதற்கு எல்லாம்வல்ல சிவகாமி சமேத நடராஜப் பெருமானின் அருள்வேண்டிப் பிரார்த்தித்து நிற்கிறோம். தங்கள் கிளையால் நடாத்தப்படும் ஆண்டு விழாவும் கலைவிழாவும் அதனையொட்டி வெளியிடப்படும் மலர் வெளியீடும் சிறப்பாக அமைந்து வெற்றி பெற வாழ்த்தி நிற்கிறேன்.

"அன்ன சத்திரம் ஆயிரம் கட்டலும், ஆலயம் பதினாயிரம் செய்தலும்
......... இன்ன யாவிலும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
-பாரதியார்-

**க. நவரெத்தினம்,**
**ஓய்வுபெற்ற தபாலதிபர்.**

# தீவகம் தெற்குப்பிரதேசம் : மீள் இடப்பெயர்வும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளும்

பேராசிரியர் கா.குகபாலன்
தலைவர் புவியியற்துறை
யாழ் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வட மேற்கே லைடன் தீவு (வேலணைத் தீவு) மண்டைதீவு, காரைநகர், புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய மக்கள் வாழும் தீவுகளும் பருத்தித் தீவு, கண்ணாத்தீவு, பாலைதீவு, கற்கடகத் தீவு, நரையான்பிட்டி, சிறுத்தீவு, கச்சதீவு போன்ற மக்கள் வாழாத தீவுகளும் காணப்படுகின்றன. மக்கள் வாழும் தீவுகளை "சப்த்ததீவுகள்" எனவும் அழைப்பதுண்டு. மக்கள் வாழ்ந்து வரும் தீவுகள் எட்டாகவிருப்பினும் மண்டைதீவும் லைடன்தீவும் கோடைகாலங்களில் தொடர்ச்சியான நிலப்பகுதியாகவும் மாரிகாலங்களில் இரு தீவுகளையும் பிரிக்கக் கூடிய வகையில் நீர் நிரம்புவதாலும் இவ்விரு தீவுகளையும் ஒன்றாகக் கொண்டே சப்த தீவுகள் என எம்முன்னோர் அழைத்துள்ளனர் போலும்.

தீவகம் வரலாற்றுக்காலங்களில் பொருளாதார, சமூக பண்பாட்டு ரீதியில் சிறப்பிடம் பெற்றுக் காணப்பட்டதாக பல்வேறு தொல்லியல் வரலாற்று மற்றும் செவிவழிச் செய்திகள் கூறிச் செல்கின்றனர். புவிவெளி யுருவவியல் ரீதியாக நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு தனித்தனிகூறுகளாக இருந்தபோதிலும் பௌதீக பண்பாட்டு ரீதியில் வேற்றுமையிலும் ஒற்றுமைப் பண்புகளைக் கொண்டிருக்கின்றன எனலாம். கடல்வழிப் போக்குவரத்தினை மேற்கொண்டு நாட்டின் ஏனைய பிரதேசங்களோடு தொடர்பினை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை காணப்பட்டிருந்தபோதிலும் புங்குடுதீவு, லைடன் தீவு, மண்டைதீவு, காரைநகர் ஆகியதீவுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் தாம்போதிப்பாலங்களினூடாக தரைவழியாகச் சென்று வரக்கூடிய வாய்ப்புக்கள் 1950 களைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக புங்குடுதீவு-வேலணைப்பாலம் (வாணர்பாலம்) அல்லைப்பிட்டியையும் பண்ணையையும் இணைக்கும் பாலம் (பண்ணைப் பாலம்) மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் விரைவான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் உருவாகின. காரைநகரையும் பொன்னாலையையும் இணைக்கும் பொன்னாலைப் பாலம் மிக நீண்டகாலத்திற்கு முன்னரே திறந்துவிடப்பட்டது. எனினும் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, ஆகியன தொடர்ந்தும் கடல்வழிப் போக்குவரத்தின் மூலமே பிறபிரதேசங்களோடு தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது.

தீவக மக்களின் வாழ்க்கை முறை மிக நீண்டகாலமாக பண்டமாற்றினை அடிப்படையாகக் கொண்ட சுய தேவை பொருளாதார முறைமைக்குட்பட்டிருந்தது. நெல் மற்றும் சிறுதானியங்கள் பனையுடன் தொடர்புடைய உணவுப் பொருட்கள் அத்துடன் குடிசை மற்றும் சிறு கைத்தொழில் பொருட்கள் கடல் வளம் போன்றனவே உற்பத்திப் பொருட்களாக இருந்துள்ளன. இவற்றில் சில பொருட்களை யாழ்ப்பாண குடாநாட்டுக்கும் தென்னிந்தியாவுக்கும் எடுத்துச் சென்று பண்டமாற்று வர்த்தகம் நடைபெற்றதற்கான சான்றுகள் நிறையவே உண்டு. பௌதீக ரீதியாக வளவாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட தீவகத்தில் குடித்தொகை விரைவாக அதிகரித்துக் கொண்டு செல்வது ஒரு புறம் இருக்க தேசிய பொருளாதார அமைப்புடன் நெருங்கிய தொடர்புகள் ஏற்படவே படிப்படியாக யாழ் குடாநாட்டினதும் நாட்டின் ஏனைய பகுதிகளினதும் தொடர்பு இப்பிரதேச மக்களுக்கு கிடைக்கப்பெற்றது. 1950 களுக்கு முன்பு இப்பிரதேசத்தில் உயர்கல்வி வளம் தாழ்ந்த நிலையில் காணப்பட்டிருந்தது. 1950களின் முற்பகுதிவரை போக்குவரத்து பிரச்சினைகளால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் சூழல் மிக அரிதாகவே காணப்பட்டிருந்தது. ஆனால் காலப்போக்கில் யாழ்ப்பாண பிரதேசங்களில் கல்வி கற்கும் சூழ் நிலை அதிகரிக்கலாயின.

1950 களுக்கு முன்னர் தீவகத்தின் கல்வி விருத்திக்கு ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரி அளப்பரிய பங்கினை நல்கியுள்ளது. 1945ம் ஆண்டு வேலணை மத்திய மகாவித்தியாலயம் (மத்திய கல்லூரி) நிறுவப்பட்டதன் பின்னர் தீவுப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு கணிசமானளவு பங்களிப்பினை இக்கல்லூரி செய்துள்ளதை மறப்பதற்கில்லை. 1960 களின் முற்பகுதியிலிருந்து இக் கல்லூரி பல பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், உயர் நிர்வாகிகள் என பலதரப்பட்டவர்களை உருவாக்கிய பெருமையைப் பெறுகின்றது. சில மாணவர்கள் இக்கல்லூரியிலிருந்து நேரடியாக பல்கலைக்கழகத்திற்குச் செல்ல மேலும் பல மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுக வகுப்பினை மட்டும் வேறு பாடசாலைகளில் பயின்று பல்கலைக்கழகம் சென்றுள்ளனர். இவை தவிர இப் பிரதேசத்தின் ஏனைய முன்னணிப் பாடசாலைகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தி வந்துள்ளன. இப்பாடசாலைகளின் மாணவர்களுள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றவர்கள் குடாநாட்டின் முன்னணிப் பாடசாலைகளில் தம்மை இணைத்து உயர் கல்வி வாய்ப்புக்களையும் உயர் பதவிகளுக்கான தகைமைகளையும் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் காணப்பட்டிருந்தன. இவற்றினால் தீவகத்தில் உயர்கல்வி கற்பவர்களும், அரச தொழில்களில் ஈடுபடுபவர்களும் அதிகரிக்கலாயினர்.

குடித்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப இயற்கை வளப்பற்றாக்குறை காணப் படுகின்றமையால் பொருளாதார நடவடிக்கையில் சகலரையும் போசிக்கக்கூடிய நிலையில் தீவகப் பிரதேசம் இருந்திருக்கவில்லை. எனவே சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து சுதந்திரத்தையடுத்த காலப்பகுதி வரை சிறு தொகையினர் வர்த்தகத்தில் ஈடுபடவும் அரசுதுறைகளில் தொழில் புரியவும் கடைகளில் சிப்பந்திகளாக பணிபுரியவும் வெளிமாவட்டங்களை நாடிச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாவர். எனினும் அவர்களது பொருட்தேட்டங்கள் சொந்தப் பிரதேசங்களுக்கே வந்தடைந்தன. இக் காலப்பகுதியினை "மணியோடர் பொருளாதாரம்" அமைப்புக்குட்பட்டிருந்ததாகக் கொள்ள இடமுண்டு.

1960களைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டு தற்காலிக, நிரந்தர இடப்பெயர்வு அரச ஊழியர்கள், வர்த்தகர்களிடையே காணப்பட்டது. இந் நிலை 1980 களின் இறுதிவரைகாணப்பட்டிருந்தது. எனினும் சொந்த ஊர்த்தொடர்பு இறுக்கமாகப் பேணப்பட்டு வந்ததைக் காண முடிந்தது. பொருட் தேட்டமுடையோரில் கணிசமானவர்கள் சொந்த ஊர்களிலும் சென்றடைந்த பிரதேசங்களிலும் இருபக்க வாழ்விடங்களைக் கொண்டிருந்தனர்.

இவ்வாறாக பொதுமைப்படுத்தப்பட்ட தீவகத்தின் பௌதீகப் பண்புகளை உள்வாங்கித் தமக்கேயுரிய சிறப்பான பண்பாட்டுடன் வாழ்ந்து வந்த மக்களுக்கு 1991 ஆம் ஆண்டு பேரதிர்ச்சி காத்திருந்தது. இலங்கை இராணுவம் தீவகத்தைத் தனிமைப்படுத்தி விடுதலைப் புலிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக தீவகப் பிரதேசங்களை கைப்பற்ற முனையவே தமது பொருள் பண்டங்கள் யாவற்றையும் இழந்து பண்ணைப் பாலத்தினூடாக விரைவாக வெளியேற வேண்டியேற்பட்டது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீவுப்பகுதி தெற்குப் பிரதேசம் முதன்மை பெறுகின்றது.

1970 களின் முற்பகுதி வரை தீவகப் பிரதேசமானது நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு என இரு நிர்வாக அலகுகளைக் கொண்டிருந்தது. தீவுப்பகுதி தெற்குப் பிரிவு ஏற்படுத்தப்படவே வேலணை, சரவணை, மண்கும்பான் அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, ஆகிய பிரதேசங்கள் உள்ளடக்கப்பட, தீவுப்பகுதி வடக்குப் பிரிவில் கரம்பன், சுருவில், ஊர்காவற்றுறை, காரைநகர், அனலைதீவு, எழுவைதீவு ஆகியன உள்ளடக்கப்பட்டன. 2003 ஆம் ஆண்டு காரைநகரினைத் தனியாகப் பிரித்து தனியானதொரு பிரதேச செயலகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை ஒரு

புறமிருக்க மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு பிரதேச செயலக எல்லைக்குள் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. இவற்றின் மூலம் அவ்வப்பிரதேசங்களை விருத்தி செய்யலாம் என்பதற்கேயாகும். அந்த வகையில் தீவக தெற்குப் பிரதேசத்தின் எல்லைக்குள் வேலணைப் பிரதேசசபை தோற்றுவிக்கப்பட்டது.

## குடித்தொகை மாற்றம்

தீவகம் தெற்குப் பிரதேசம் 84.0 சதுரகிலோமீற்றரைக் கொண்ட பெரிய நிலப்பகுதியாகும். இப் பிரதேசத்தில் 1990 ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் 52688 மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். 2003 ஆம் ஆண்டு 16154 மக்கள் வாழ்கிறார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை : 1 தீவகம் - தெற்குப் பிரதேசத்தின் குடித்தொகை (1990-2003)

| பிரதேசம் | 1990 | 1994 | 1996 | 2002 (மார்கழி) | 2003 (வைகாசி) |
|---|---|---|---|---|---|
| மண்டைதீவு | 5030 | 43 | 41 | 876 | 1131 |
| அல்லைப்பிட்டி | 1840 | 255 (அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, சரவணை) | 64 | 1138 | 1318 |
| மண்கும்பான் | 1804 | | 18 | 551 | 643 |
| வேலணை | 15365 | | 1172 | 5097 | 5284 |
| சரவணை | 3663 | | 122 | 736 | 792 |
| புங்குடுதீவு | 20012 | 857 | 979 | 3678 | 3898 |
| நயினாதீவு | 4974 | 4232 | 3233 | 3188 | 3088 |
| மொத்தம் | 52688 | 5388 | 5629 | 15214 | 16154 |

**ஆதாரம் : தீவகம் தெற்குப் பிரதேச செயலக அறிக்கைகள் 1990-2003**

1991ஆம் ஆண்டு தூண்டப்பட்ட இடப் பெயர்வின் விளைவாக தீவகம் தெற்குப் பிரதேசத்தில் நயினாதீவு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த மக்களில் 90.0 சதவீத மக்கள் வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது. இவர்கள் யாழ்குடாநாடு, வன்னிப்பிரதேசம், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் சிதறி வாழ நேரிட்டது. இவர்களில் கணிசமானோர் ஏற்கனவே சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களுடன் இணைவதற்கு சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டனர். இப் பிரதேசத்திலிருந்து 1990 களில் சர்வதேச

இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களின் உண்மையான எண்ணிக்கை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வது கடினமானதேயாயினும் இப்பிரதேச மக்களில் 25.0-30.0 சதவீதத்தினர் சர்வதேச இடப் பெயர்வுக்குட்பட்டிருக்கலாம் என்பதனை ஆரம்ப இடத்தின் குடித்தொகையினை மதிப்பீடு செய்வதன் வாயிலாகவும் சர்வதேச நாடுகளில் கிராமரீதியான சங்கங்களில் இணைந்துள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் கொண்டு அனுமானிக்க முடிகின்றது.

ஏற்கனவே கூறப்பட்டுள்ளது போல சுதந்திரத்திற்கு முன்னரான வெளியிடப் பெயர்வு,1950 களின் முற்பகுதியிலிருந்து குடியேற்றத்திட்டத்தினூடான வெளியிடப் பெயர்வு, அரசுதொழில் மற்றும் வர்த்தகத்தில் ஈடுபாடு கொண்டவர்களின் வெளியிடப்பெயர்வு, கல்வியுடன் கூடிய வெளியிடப்பெயர்வு எனப்பல நிலைகளில் வெளியிடப் பெயர்வுகள் இப் பிரதேசங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட போதிலும் குடித்தொகை வேறுபாட்டில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்றே கூறல் வேண்டும். எனினும் 1991 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தூண்டப்பட்ட இடப்பெயர்வானது இப் பிரதேசத்தில் குடித்தொகைப் போக்கில் பாரியளவிலான வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் பொருளாதார மற்றும் சமூகத் தேட்டங்கள் அழிவுக்குட்பட்டும் அழிக்கப்பட்டும் காணப்படும் துர்ப்பாக்கிய நிலையினை இப் பிரதேசம் தற்போது கொண்டிருப்பதைக் காண முடிகிறது. 1990 இல் 52688 மக்கள் வாழ்ந்திருக்க 1994 இல் 5388 மக்களே வாழ்ந்துள்ளனர். அதாவது 1990 ஆம் ஆண்டுக் குடித்தொகையில் 10.2 சதவீதத்தினர் மட்டுமேயாகும். இடப்பெயர்விற்குட்படாது வாழவேண்டிய நிலையிலிருந்த நயினாதீவு மக்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து செல்வதனை அட்டவணை 1 காட்டி நிற்கின்றது. 1990 ஆம் ஆண்டில் நயினாதீவு தவிர்ந்த தீவுப்பகுதித் தெற்கில் 47714 மக்கள் வாழ்ந்திருந்தனர். ஆனால் 1994 ஆம் ஆண்டில் மேற்குறித்த பிரதேசங்களில் 1155 மக்களே வாழ்ந்து வந்துள்ளனர். நயினாதீவு தவிர்ந்த ஏனைய தீவகம் தெற்குப் பிரதேசத்தில் 1990 இல் 47714 மக்கள் வாழ்ந்திருக்க 2001 ஆம் ஆண்டு மே மாதம் 13066 மக்கள் அதாவது 1991 ஆம் ஆண்டுக் குடித்தொகையில் 27.3 சதவீதத்தினரே வாழ்ந்து வந்துள்ளனர். அதாவது 1994 இல் 2.4 சதவீத மக்களே வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நயினாதீவுக் குடித்தொகையையும் சேர்த்துக் கணிப்பிடின் 30.6 சதவீதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அதாவது 69.4 சதவீத மக்கள் வெளியிடப் பெயர்வுக்குள்ளாகியுள்ளனர் என்பது புலனாகின்றது. எனவே கடந்த 13 ஆண்டுகளுக்கு பின்னர் இப் பிரதேசத்திற்கு மீள் இடப் பெயர்வினை மேற்கொள்ளாமைக்கான காரணிகளைக் கண்டறிதல் அவசியமானதும் காலத்துக்குகந்ததுமாகும்.

### மீள் இடப்பெயர்வுப் பண்புகள்

பெரும்பாலான தீவக மக்கள் தாம் பரம்பரையாக வாழ்ந்து வந்த பிரதேசங்களை விட்டு நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களுடன் அன்பும், விசுவாசமும் கொண்டிருக்கின்ற போதிலும் மீள் இடப் பெயர்வில் பெருமளவு அக்கறை கொண்டவர்களாக விருக்கவில்லை. தீவுகளடிப்படையில் 1990 ஆம் ஆண்டு மதிப்பீட்டோடு ஒப்பிடும் போது 2003 ஆம் ஆண்டு மே மாதத்தில் வாழ்ந்து வந்த மக்களின் எண்ணிக்கை அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2

இடப்பெயர்வு நிலை - 1990-2003 (*)

| பிரதேசம் | 1990 | 2003 (மே) | சதவீதம் |
|---|---|---|---|
| மண்டைதீவு | 5030 | 1131 | 22.5 |
| அல்லைப்பிட்டி | 1840 | 1318 | 71.6 |
| மண்கும்பான் | 1804 | 643 | 35.6 |
| வேலணை | 15365 | 5284 | 34.4 |
| சரவணை | 3663 | 792 | 21.6 |
| புங்குடுதீவு | 20012 | 3898 | 19.5 |
| நயினாதீவு | 4974 | 3088 | 62.1 |
| மொத்தம் | 52688 | 16154 | 30.7 |

ஆதாரம் : தீவகம் தெற்குப் பிரதேச செயலக அறிக்கைகள்: 1990-2003

* இயற்கை அதிகரிப்பு, உள்வெளி இடப்பெயர்வு பற்றிக் கருத்திற் கொள்ளாது கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2 ஐ கருத்தில் கொள்ளின் 1990 அம் ஆண்டுக் குடித்தொகையில் 71.6 சதவீதத்தினர் அல்லைப்பிட்டிக் கிராமத்திற்கு வருகை தந்துள்ளனர். நயினாதீவில் 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அண்மைக்காலங்களில் குடித்தொகையில் வீழ்ச்சி நிலையையே காட்டியுள்ளது. இங்கு 1990 ஆம் ஆண்டுக் குடித்தொகையில் 62.1 சதவீதத்தினரே

2003 ஆம் ஆண்டு வாழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து படிப்படியாக கருவள செயற்பாடுள்ளவர்களிடையேயான வெளியிடப் பெயர்வு அதிகரித்துக் காணப்படுகின்றது. காலப் போக்கில் இயற்கை அதிகரிப்பு குறைவடையும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் நயினாதீவின் எதிர்காலக் குடித்தொகை தொடர்ந்தும் குறைவடைய வாய்ப்புண்டு. புங்குடுதீவு கிராமத்திலேயே மக்கள் மீள் இடப்பெயர்வு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதாவது 19.5 வீதத்தினராகவுள்ளது. எனினும் போக்குவரத்து, பாதுகாப்பு நிலைமை, மற்றும் அடிப்படை வசதிகளில் முன்னேற்றம் ஏற்படும் பட்சத்தில் இடப் பெயர்வு மேற்கொண்டோரில் 10.0-15.0 சதவீதத்தினர் மீள் இடப் பெயர்வினை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

1996 ஏப்ரல் மாதத்திலிருந்து இப் பிரதேசங்கள் நோக்கிய உள் வரவினை அரசாங்கம், பிரதேச செயலகம், பிரதேசசபை போன்றன ஊக்குவித்து வருகின்ற போதிலும் மக்களின் மீள் இடப்பெயர்வு மிகக் குறைவாக இருப்பதற்கான காரணிகளைக் கண்டறிதல் அவசியமானது அதனைப் பின்வரும் தலைப்புகளில் நோக்குதல் சிறப்பானது.

அ) பௌதீக வளவாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்

ஆ) பாதுகாப்பு உத்தரவாதமின்மை

இ) சேரிடம் வசதிவாய்ப்புக்களைப் பெற்றிருத்தல்

ஈ) கல்விச் செயற்பாடுகளில் பின்னடைவு

உ) சர்வதேச இடப்பெயர்வு

**அ) பௌதீக வளவாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்**

தீவகத்தின் பௌதீக வளம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவேயுள்ளது. வளம் குறைந்த நரைமண் தொகுதியைக் கொண்டிருப்பதுடன் வருடாந்த மழைவீழ்ச்சி 50.0 அங்குலத்திற்கும் குறைவானதேயாகும். தரைகீழ் நீர் வளம் குறிப்பாக நன்னீர் வளம் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்களில் நன்னீர் வளம் முறையே 19.0, 12.0, 30.0, 25.0

சதவீதமாகவேயுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நன்னீர் வளப்பற்றாக்குறையினால் இப்பிரதேச மக்கள் சொல்லொண்ணாத் துயரத்தினை அனுபவித்து வருகின்றனர். மேலும் விவசாய நிலங்கள் குடியிருப்பு நிலங்களாக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது தொடர்ச்சியாக விரைவாக தரிசு நிலங்களாக மாற்றமுற்று வருகின்றன.

பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் பயிற்செய்கைக்குட்பட்டிருந்த நிலங்களில் பெரும்பாலானவை வறள்வலயத்திற்குரிய வளரிகளினால் மூடப்பட்டுக் காணப்படுகின்றன. எனவே விவசாயப் பொருளாதார முறைமையை மீள உருவாக்க முடியாததாகவுள்ளதுடன் விவசாயிகளாக இருந்தவர்களில் பெரும்பாலோனோர் விவசாயத் தொழிலை விட்டு வெளியிடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். மீன்பிடித்தொழில் புரிந்தவர்களைவிட ஏனைய தொழில் புரிந்தவர்களிடையே வேலைவாய்ப்பு பெருமளவில் ஸ்தம்பித்த நிலை வெளியிடப் பெயர்வின் விளைவாக ஏற்பட்டுள்ளது. உதாரணமாக புங்குடுதீவுக் கிராமத்தில் கணிசமான அளவில் வாழ்ந்து வந்த தச்சுத்தொழில் புரிந்தவர்களுக்கு அத்தீவில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவர்கள் தூண்டப்பட்ட இடப்பெயர்வின் விளைவாக புதிய இடங்களைத் தெரிவு செய்து அவ்வவ்விடங்களை நிரந்தரப் பிரதேசங்களாக்கிக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பௌதீக வளவாய்ப்பற்ற பிரதேசத்தினை விரும்பாத நிலையும் உள்வரவு மட்டுப்படுத்துவதற்குரிய காரணிகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

### ஆ) பாதுகாப்பு உத்தரவாதமின்மை

தீவகத்தில் குறிப்பாக தீவகம் தெற்குப் பிரதேசம் வளவாய்ப்பற்ற நிலையில் காணப்பட்டிருந்த போதிலும் தாம் பிறந்து, வாழ்ந்த சொந்த மண்ணில் தற்போது பாதுகாப்புக்கு உத்தரவாதமின்மையை கருத்திற்கொண்டு மீள் இடப்பெயர்வினை மேற்கொள்ளத் தயங்கும் நிலையும் முக்கியத்துவம் பெறுகின்றது. குடியிருப்புக்கள் பல வெறுமையாகவிருத்தல், பாதுகாப்புப் படையினர் முகாமிட்டிருத்தல், காலத்துக்குக் காலம் நிகழ்ந்துவரும் அசம்பாவித சம்பவங்கள், போக்குவரத்துக்களில் பாதுகாப்புப் படையினரின் மேலாண்மை, மக்கள் நடமாட்டம் குறைவாகவிருத்தல், மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து முறைமைகள், மாணவர்களின் கல்வி நிலை வாய்ப்பற்றிருத்தல் போன்ற பல காரணிகளால் மீள் இடப்பெயர்வில் மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை.

இ) சேரிடம் வசதிவாய்ப்பினைக் கொண்டிருத்தல்

தீவகம் தெற்குப் பிரதேசத்திலிருந்து தூண்டப்பட்ட இடப்பெயர்வு மேற்கொள்ளப்பட்டு ஏறத்தாழ 13 ஆண்டுகள் கடந்து விட்டது. இது மிக நீண்ட காலப்பகுதியாகும். சேரிட வாழ்க்கை அமைப்புக்குள் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளதாலும் ஆரம்ப இடத்தில் உள்ள குடியிருப்புக்கள் உட்பட சகல வசதி வாய்ப்புக்களும் செயலிழந்த அல்லது அழிவுக்குட்பட்டதாக காணப்படுவதனாலும் மீள் இடப்பெயர்வினை மேற்கொள்வதில் மக்கள் பின்னிற்கின்றனர். தாம் சென்றடைந்த பிரதேசங்களில் தமது சொந்தப் பிரதேசங்களில் காணப்படாத வளவாய்ப்புக்கள் காணப்படுகின்றமையாலும் அவ்வவ்விடங்களை நிரந்தரமாக்கிக் கொண்டுள்ளனர் எனலாம். குறிப்பாக புதிய சேரிடங்களில் நன்னீர்வளம் இருப்பதும் அவ்வவ்விடங்கள் கவர்ச்சிக்குரியதாக காணப்படும் காரணிகளில் ஒன்றாகும்.

இடப்பெயர்வாளர்களைப் பொறுத்தவரை தமது பிள்ளைகளின் கல்விக்கான வாய்ப்பு சேரிடங்களில் காணப்படுவதால் அவ்வவ்விடங்களில் பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்பினை குறிப்பாக நகரப் பாடசாலைகளில் பெறக் கூடியதாகவிருக்கின்றது. கணிசமான பெற்றோர், மற்றும் வயது வந்தவர்களுக்கு தமது சொந்த இடங்களில் சென்று வாழவிருப்பமிருந்தபோதிலும் பிள்ளைகளின் அன்புக் கட்டளையை ஏற்கவேண்டிய நிலையில் இருப்பதால் மீள் இடப் பெயர்வுக்கு பின்னிற்கின்றனர். குறிப்பாக வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் தமது உறவினர்களை மீண்டும் சொந்த இடத்திற்குச் சென்று வாழ்வதற்கு விருப்பம் கொண்டவர்களாகவிருக்கவில்லை. இதனால் சேரிடங்களில் குடியிருப்புக்களை வாங்கியோ அல்லது வாடகைக்குப் பெற்றோ அங்கேயே தங்கவைத்துள்ளனர். யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதிகள், மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றவர்களிடையே இத்தகைய பண்பினைக் காண முடிகின்றது.

இடப்பெயர்வாளரின் ஆரம்பப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளற்ற நிலை தொடர்ந்தும் நிலவுகின்றது. குறிப்பாக மருத்துவவசதிகளைப் பொறுத்தவரை அரசு இதுவரை மீள செயற்படுத்தவில்லை. அண்மைக் காலங்களில் பலர் இப் பிரதேசங்களில் மீள் இடப்பெயர்வினை மேற்கொண்டிருந்த போதிலும் அவர்களில் சிலர் வேறு பிரதேசங்களைச் சென்றடைந்த சம்பவங்களையே காணமுடிகின்றது. அத்துடன் மீள் இடப்பெயர்வினை மேற்கொள்ளும் பட்சத்தில் வேலை வாய்ப்புக் கிடைக்கும் எனக் கூறுவதற்கில்லை.

(ஈ) கல்விச் செயற்பாடுகளின் பின்னடைவு

1991 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இடப்பெயர்வின் விளைவாக நயினாதீவு தவிர்ந்த ஏனைய தீவகத் தெற்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள் செயலிழந்தன. 1996 ஆம் ஆண்டின் பின்னர் மக்களின் மீள் இடப்பெயர்வுக்கமைய பாடசாலைகளில் சில மீண்டும் செயற்படத் தொடங்கின. உதாரணமாக புங்குடுதீவில் கல்விப்பணியாற்றி வந்த 15 பாடசாலைகளில் ஐந்து பாடசாலைகளே மீண்டும் இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதே போலவே ஏனைய பிரதேசங்களது நிலையுமாகும். தொடர்ந்தும் வாழ்ந்து வந்த, மற்றும் மீள் இடப்பெயர்வினை மேற்கொண்ட பெற்றோர், மாணவர்களிடையே கல்வியில் அக்கறை மிகக் குறைவாகவிருத்தல், வறுமை நிலை போன்றன ஒரு புறமிருக்க கற்பித்தலுக்கான பௌதீக மற்றும் ஆளணி வளப்பற்றாக்குறை, போன்றன தொடர்ந்தும் கல்வி நிலையில் பின் தங்கியிருப்பதற்கான காரணிகளாகவிருக்கின்றன. எனவே கல்வியே வளம் எனக் கருதும் இப் பிரதேசத்திலிருந்து இடப்பெயர்வு மேற்கொண்ட மக்களை மீள் இடப்பெயர்வுக் குட்படுத்துவதென்பது கடினமான செயற்பாடாகவே அமைகின்றன.

எனவே இப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியினை முன்னெடுத்துச் செல்வதற்கு இப் பிரதேச மக்களின் அக்கறையினைத் தூண்டும் வகையில் நலன்புரி நிலையங்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது மட்டுமல்லாது கல்விப் புலத்தினது அயராத அர்ப்பணிப்பும் அவசியமாகின்றது. குறிப்பாக வேலணை மத்திய மகாவித்தியாலயம், புங்குடுதீவு மகா வித்தியாலயம் மண்டைதீவு மகாவித்தியாலயம், நயினாதீவு மகாவித்தியாலயம் போன்ற முன்னணிப் பாடசாலைகளை சகல வளவாய்ப்புக்களுடன் இயங்க ஆவன செய்யும் பட்சத்தில் மீள் இடப்பெயர்வாளரை ஓரளவு கவரமுடியும். அத்துடன் வேலணை மத்திய மகாவித்தியாலயம் இப் பிரதேச உயர் கல்வி வளர்ச்சிக்குக் கூடுதலான அக்கறை செலுத்தும் பட்சத்திலேயே கல்வி வளம் தொடர்ந்தும் அழியாது பேணப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உ) சர்வதேச இடப்பெயர்வு

1970 களின் பிற்பகுதியிலிருந்து சர்வதேச இடப்பெயர்வில் தீவக மக்கள் குறிப்பாக இளைஞர்கள் ஆர்வம் கொண்டவர்களாக இருந்துள்ளனர். தீவகம் தெற்குப் பிரதேசத்திலிருந்து கணிசமானவர்கள் சர்வதேசங்களைச் சென்றடைந்தனர். அப்பிரதேசத்திலிருந்து 25.0 - 30.0 சதவீதத்தினர் சர்வதேச இடப் பெயர்வுக் குட்பட்டுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக காலத்துக்குக்காலம் இடப்பெயர்வின்ன மேற்கொண்டவர்கள் அவ்வவ் நாடுகளின் சட்டத்திற்கமைய தங்கள் உறவினர்களையும் தங்களுடன் இணைத்துக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களாக இருந்து வருகின்றனர். குறிப்பாக கனடாவில் வாழ்பவர்களிடையே இத்தகைய பண்புகள் மேலோங்கிக் காணப்படுகின்றது. இதனால் சர்வதேச இடப்பெயர்வு தொடர்கின்றது.

இந்நிலையில் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வருபவர்களிடையே மீள் இடப்பெயர்வு என்பது சாத்தியப்படாது என்றே தோன்றுகின்றது. ஒருவேளை நாட்டில் அமைதி நிலை உருவானால் அவ்வவ் நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் கூட வளவாய்ப்பற்ற தமது சொந்தப் பிரதேசங்களுக்கு திரும்புவர் எனக் கொள்ள முடியாது. அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலோ அன்றில் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலோ வாழ முற்படுவர். அதாவது வெளிநாடுகளில் இப் பிரதேசத்தைச் சார்ந்தோர் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற நகரங்களில் குடியிருப்புக்களை அண்மைக் காலங்களில் கொள்வனவு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச இடப்பெயர்வுக்குட்பட்டோர் தமது சொந்தப் பிரதேசங்களை நேசிக்கின்றனர். அதாவது தத்தம் சொந்த ஊரவர்களை ஒன்றிணைத்து சங்கங்கள் அமைத்து தமது ஊரில் போரினால் நொந்து போயிருக்கும் கல்வியுட்பட அடிப்படைத் தேவைகளுக்கு உதவி புரிந்து வருகின்றனர். இவை வரவேற்கத்தக்கது. ஆனால் அவர்களது வாரிசுகள் தமது பிரதேசங்களை நேசிப்பர் எனக் கூறமுடியாது. பெரும்பாலான சிறுவர்கள், குழந்தைகள் யாவரும் சென்றடைந்த நாடுகளின் மொழிகளிலேயே கல்வி கற்பதுடன் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகவே கருதுகின்றனர். அதுமட்டுமல்லாது ஊரோடு இணைந்து வாழ்ந்தவர் வயதாகிவிட்ட நிலை ஒரு புறமிருக்க பலர் இறப்பினையும் தழுவிக் கொள்கின்றனர். இதனால் தமது ஊர்த்தொடர்பினை விரும்பியோ, விரும்பாமலோ விலக்கிக் கொள்ளும் நிலை ஏற்படவும் ஏதுவாகின்றது. அத்துடன் வெளிநாடுகளிலுள்ளவர்களுக்கு தமது சொந்தப் பிரதேசம் கவர்ச்சியைக் கொடுக்க மாட்டாது. மேலும் சொந்தப் பிரதேசங்களில் உள்ள நிலபுலங்கள், குடியிருப்புக்களை அறியாதவர்களாகவும் இருக்கும் நிலை இளஞ் சமூகத்தினருக்கு ஏற்படலாம். அவற்றிற்கான பெறுமதியும் அவர்களுக்கு மிகச் சிறியதாகவே தோன்றலாம். இந்நிலையில் சர்வதேச இடப் பெயர்வுக்குட்பட்டவர்களின் மீள் இடப்பெயர்வு பெருமளவிற்கு சாத்தியப்படாத நிலையே தொடரும் என நம்பலாம்.

## ஏ9 பாதை திறப்பும் உள் வரவும்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏ9 பாதை மக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்ட பின்னர் வன்னிப்பகுதியிலும் தென்னிலங்கையிலும் தற்காலிகமாக வாழ்ந்து வந்தவர்களில் கணிசமானவர்கள் யாழ் குடாநாட்டுக்கு வந்துள்ளனர். இவர்களில் சிறு தொகையினர் தீவகத்தைச் சேர்ந்தவர்கள். தீவகம் தெற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்கு ஏறத்தாழ 5000 மக்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலிருந்து உள் வரவை மேற்கொண்டுள்ளனர் என்பதை புள்ளி விபரங்கள் மூலம் காண முடிகின்றது. 2001 ஆம்

ஆண்டு தை மாதம் இப் பிரதேசத்தில் 11000 மக்கள் வாழ்ந்து வந்த வேளை 2003 ஆம் ஆண்டு மே மாதம் 16000 மக்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இந் நிலையில் வன்னிப் பிராந்தியத்திலிருந்து உள் வரவை மேற்கொள்ளவிருந்தவர்களில் பெரும்பாலானோர் வந்து விட்டனர் எனலாம். மேலும் சிறு எண்ணிக்கையினர் சமாதானம் ஏற்படின் மீளவாய்ப்புண்டு. தென்னிலங்கையில் வாழ்பவர்கள் மீண்டும் தமது பிரதேசங்களுக்கு மீள வருவர் என கூறமுடியாது. அவர்களில் பலர் அவ்வவ் பிரதேச சூழ்நிலைக்கேற்ப தம்மை இயல்பாக்கிக் கொண்டுள்ளனர் என்பதை நேரடியாக அறிய முடிகின்றது. 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து தற்போது 30.6 சதவீத மக்களே வாழ்ந்து வருகின்றனர். எதிர்காலத்தில் இயற்கை அதிகரிப்புடன் எஞ்சிய உள்வரவும் இணைந்தாலும் 45.0 சதவீதத்துக்கு மேற்பட வாய்ப்பில்லை என்றே கூறல் வேண்டும்.

எதிர்காலம்

தீவகம் தெற்குப் பிரதேசத்தின் வளவாய்ப்புக்கள் மட்டுப் படுத்தப் பட்டதாகவிருப்பதுடன் ஏற்கெனவே வாழ்ந்து வந்ததாகவேயுள்ளது. இது ஒரு வழிக்கு ஆரோக்கியமானதாக இருக்கலாம். எனினும் இப் பிரதேசங்களில் உட்கட்டுமான அமைப்பு, வாழ்விடங்கள், கல்விக் கூடங்கள் மற்றும் வணக்கத்தலங்கள், பொது அமைப்புக்களின் கட்டடங்கள் என்பவற்றில் பெரும்பாலானவை பயன்பாட்டுக்குட்படாதனவாகவும், சமூக விரோதிகளின் கையாலாகாத நிலையினாலும் அழிவுக்குட்பட்டு வருகின்றன. இவற்றினைப் பாதுகாக்கும் பொறுப்பு பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றினது பாரிய கடமையாகும். தனிப்பட்டவர்களின் குடியிருப்புக்களை அவரவர்களின் அனுமதியுடன் குழுமம் குழுமமாக வகுத்து பாதுகாப்பதுடன் அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல் அவசியமானது. குறிப்பாக இக் கட்டடங்களை ஆடைக் கைத்தொழில், கைத்தொழில் பேட்டைகளை அமைத்தல், தகரத்தில் மீன், பயணிகளைக் கவரக்கூடிய கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்தல் போன்றன மேற்கொள்வதற்குப் பயன்படுத்தலாம். இவற்றைப் புனரமைப்பதற்கும், பயன்படுத்துவதற்குமாக பிரதேச மட்டத்தில் சமூகத்தை உண்மையாக நேசிக்கும் சமூக சேவகர்களை உள்ளடக்கிய குழுக்களின் மூலம் செயற்படுத்தலாம். இதற்கான நிதி பிரதேசமட்டத்தில் காணப்படாமலும் இருக்கலாம். அவ்வவ்குடியிருப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் நிச்சயம் உதவுவர். ஏனெனில் தமது குடியிருப்புக்கள் பாதுகாக்கப்படும் என்பதனாலேயாகும். எனவே இப் பிரதேசத்தை விட்டு வெளியேறியவர்கள் யாவரும் வருவார்கள் என்பதை விடுத்து தற்போதைய களநிலவரத்துக்கு ஏற்ப செயற்படல் வேண்டும். இதுவே இப் பிரதேசம் தொடர்ந்தும் நிலைபெற வழிசமைக்கும்.

# இலங்கையில் பல்கலைக்கழகக்கல்வி குறைந்து செல்லும் இளைஞர் நாட்டம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
கல்விப் பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

இலங்கையில் இனங்காணக்கூடிய பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களுள் பல்கலைக்கழகங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. இலங்கைக் கல்வி மரபில் உயர்கல்வி என்பது பல்கலைக்கழகக்கல்வியையே பெரும்பாலும் குறிக்கின்றது. பதின்மூன்றாண்டுப் பாடசாலைக் கல்வியும் பெரும்பாலும் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கே இட்டுச் செல்கின்றது. க.பொ.த உயர்நிலை வகுப்புப் பாட ஏற்பாடும் கற்கை நெறிகளும் பல்கலைக்கழகக் கல்வியை நோக்காகக் கொண்ட ஆயத்தப் பயிற்சி நெறிகளாகவே உள்ளன. இந்நிலைக்கான பாட ஏற்பாடு பல்கலைக்கழகப் போதனாபீடங்களின் தொடர்பும் பங்களிப்பும் இன்றித் தயாரிக்கப்படுவதில்லை. பல்கலைக்கழகங்கள் இன்று ஆண்டு தோறும் 12,500 மாணவர்களுக்கு மட்டுமே இடமளித்தாலும் உயர்நிலைப் பரீட்சைக்கமரும் 200,000 மாணவர்கள், உயர்நிலை வகுப்புகளில் பல்கலைக்கழகக் கல்விக்கான ஆயத்தத்தையே பெறுகின்றனர். இது ஒரு பெருங்குறைபாடான அம்சமென்பதும், 12500 பேர் தவிர்ந்த ஏனையோர் தொழில் உலகில் சேர்ந்து கொள்ள எதுவித திறன்களையும் பயிற்சிகளையும் உயர்நிலை வகுப்புகளில் பெறுவதில்லை என்பதும் வெளிப்படையான உண்மைகள்.

மறுபுறம் உயர்நிலை பரீட்சைக்கு அமரும் இரண்டு இலட்சம் மாணவர்களில், பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதிபெறும் அனைவருக்கும் அனுமதி கிடைப்பதில்லை. அண்மைக்காலங்களில் தகுதி பெறுவோர் தொகை 70-90,000 பேர் என்றால் அவர்களில் 10-12,500 பேர்வரையே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். பல்வேறு காரணங்களால் பல்கலைக்கழகக்கல்வியை கட்டுப்படுத்தும் கொள்கைகளே பின்பற்றப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகக்கல்விக்கான அரசாங்கச் செலவானது பாடசாலை மாணவர்களுக்கான செலவைவிடப் பன்மடங்கு அதிகமானது. இன்று 12 பல்கலைக்கழகங்கள் இயங்கி வந்தாலும் மொத்தத்தில் 12,500 பேருக்கு மட்டுமே இடமுண்டு இத்தொகையை அதிகரிக்கும் போது உயர்கல்விக்கான செலவு மேலும் அதிகரிக்க இடமுண்டு. அத்துடன் பட்டம் பெற்று வெளியேறும் இளைஞர்களில் இன்று 25000 பேர் வரை வேலையின்றி சிரமப்படுவதால் ஏற்படுகின்ற பதட்டநிலையும் உயர்கல்வியின் விரிவுக்கு எதிராகச் செற்படும் மற்றொரு காரணியாகும்.

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியின் இன்றைய போக்குகளைப் பின்வரும் தகவல்கள் விளக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | | மொத்த பல்கலைக்கழகங்கள் (திறந்த பல்கலைக்கழகம் உட்பட) | 13 |
| 2. | அ) | போதனாபீடங்களின் (Faculties) தொகை | 66 |
| | ஆ) | துறைகளின் (Depurtments) தொகை | 374 |
| | இ) | ஆசிரியர்கள் (விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள்) தொகை | 3390 |
| 3. | | கல்விக்கான அரசாங்கச் செலவு மொத்த அரசாங்கச் செலவில் | 10.2% |
| | | பல்கலைக்கழகக் கல்விக்கான செலவு | ரூ.444 கோடி |
| 4. | | கல்விச் செலவு (தனிநபருக்கு) | |
| | | - பாடசாலைகல்விச் செலவு | ரூ. 7453/= |
| | | - பல்கலைக்கழகச் கல்விச் செலவு | ரூ 128,673/= |
| 5. | | மாணவர் சேர்வு வீதம் | |
| | | - பாடசாலைக்கல்வி வயதெல்லை 5-19 | 64.6% |
| | | - பல்கலைக்கழகக்கல்வி வயதெல்லை 20 - 24 | 2.4% |
| 6. | | ஆண்டு தோறும் பட்டம் பெறுவோர் தொகை | 8360 |
| | | உயர்பட்டம் பெறுவோர் தொகை | 1700 |

| | | | |
|---|---|---|---|
| 7. | ஆண்டுதோறும் அனுமதி பெறுவோர் | | |
| | - பாடசாலைகளில் அனுமதி பெறுவோர் (முதலாம் வகுப்பு) | 330,000 | |
| | - பல்கலைக்கழகம் | 12,144 | |
| 8) | - க.பொ.த உ/நி பரீட்சைக்கு அமருவோர் தொகை (2001) | 198,000 | |
| | - பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றோர் | 98,000 | |
| | | ஆண்டு 2000 - | ஆண்டு 2001 |
| | - தகுதி பெற்றவர்களில் அனுமதி பெறுவோர் சதவீதம் | 16.08% | 16.26% |

க.பொ.த சாதாரணநிலை பரீட்சையில் குறிப்பிட்ட தராதரங்களைப் பெறுவோரே க.பொ.த உயர்நிலை வகுப்புகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் க.பொ.த உயர்நிலை பரீட்சைக்கு அமருவோரில் ஏறத்தாழ 45-50 சதவீதமானவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதிகளைப் பெறுகின்றனர். (1980 இல் 43%, 1990 இல் 20.7%, 1997 இல் 51%, 2000 இல் 49.6%).

இவ்விடத்து அவதானிக்க வேண்டிய முக்கியவிடயம் ஒன்றுண்டு. க.பொ.த. உயர்நிலை பரீட்சையில் அனுமதி பெறத்தகுதி பெறுவோர், அனுமதிக்கான விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு (ப.மா.ஆ) அனுப்புதல் வேண்டும். உதாரணமாக 2001ம் ஆண்டில் தகுதி பெற்ற 98,000 பேரும் இவ்வாறு விண்ணப்பித்தால் மட்டுமே அவர்களில் 12,500 பேர்வரை தெரிவு செய்யப்பட்டிருப்பர். ஆனால் அண்மைக்காலங்களில் இவ்வாறு விண்ணப்பிப்போர். தொகை பெரிய அளவில் வீழ்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ப.மா. ஆணைக்குழுவின் தகவல்கள் இதனை உறுதி செய்கின்றன. 80-98,000 பேர்வரை தகுதி பெற்றும் விண்ணப்பிப்போர் தொகை பெரிதும் வீழ்ச்சி கண்டுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதி விபரங்கள் 1999 - 2002

| | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|
| 1. அனுமதி பெறத் தகுதி பெற்றோர் | 73,560 | 91,676 | 98,432 | 92,250 |
| 2. அனுமதிக்கு விண்ணப்பித்தோர் | 24,461 | 37,122 | 25,704 | 25,704 |
| 3. இறுதியில் அனுமதி பெற்றவர்கள் | 11,309 | 11,805 | 11,962 | 12,144 |

ஒரு புறம் அரசாங்கம் உயர்கல்வி வாய்ப்புகளை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு; உயர் கல்வியை நாடுவோரின் அபிலாசைகள் நிறைவேறாமையால் ஏற்படக்கூடிய விரக்தியும் ஏமாற்றமும் கடந்தகாலங்களில் இளைஞர் கிளர்ச்சிகளுக்கு ஒரு முக்கிய காரணம் என்பது பலரது கருத்து.

மறுபுறம் மேற்கண்ட புள்ளி விபரங்களின்படி அனுமதித்தகுதிகளைப் பெற்றவர்களும் அனுமதி பெற விண்ணப்பிக்கத் தயங்குகின்றனர். இவ்வாறான இளைஞர் தயக்கமானது உயர்கல்வியின் மீதான இளைஞர்களின் நாட்டம் மிகவும் குறைந்து வருவதையே காட்டுகின்றது.

இத்தயக்கத்துக்கான காரணங்கள் இன்னும் முறையாக ஆராயப்படவில்லை. எனினும் உத்தேசமாகப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன. தமது மொத்தப்புள்ளிகள் (அல்லது இசற்புள்ளி) அனுமதி பெறப் போதாது எனக் கருதும் மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்புவதில்லை;

- பல்கலைக்கழகங்களில் அதிகரித்துவரும் 'பகிடிவதை', வன்செயல்கள் காரணமாகப் பெற்றோரும் மாணவர்களும் விண்ணப்பிக்கப் பின்வாங்குகின்றனர்;
- 25,000 பட்டதாரிகள் வரை வேலையற்றிருப்பதால் மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியில் ஊக்கம் செலுத்த முடியவில்லை;

- வறுமையான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இளம் வயதிலேயே (20,21) வேலைக்குச் சேர்வதால் சில ஆண்டுகளில் நல்ல நிலைக்கு வந்துவிடலாம்; அதனால் பல்கலைக்கழகங்களில் 3,4 ஆண்டுகளைச் செலவிட விரும்புவதில்லை;
- தேசிய பல்கலைக்கழங்களில் சுயமொழிகளில் பயிலுவோருக்கு அண்மைக்காலம் வரை அரசாங்க வேலைவாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் இன்று மொத்த வேலை வாய்ப்புகளில் 13% அளவே அரசாங்கத்துறையால் வழங்கப்படுகின்றது. இதனை நம்பி 3,4 வருடங்கள் படிப்பில் செலவிடுவது வீணானது என்ற கருத்து வளர்ந்துவிட்டது;
  - 40 சதவீத வேலைவாய்ப்புகளை வழங்கும் தனியார்துறையின் மனிதவளத் தேவைகளுக்குப் பொருத்தமானதாகப் பல்கலைக்கழகக் கல்வி அமையவில்லை.
  - வசதியுள்ள ஒரு சில மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டங்களே மேலானவை என்று கருவதால் உள்ளூர் பல்கலைக்கழகங்களை நாடுவதில்லை.

எவ்வாறாயினும் இவ்வாறான உயர்கல்வி அபிலாசைகளிலும் நாட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கான காரணங்கள் கண்டறியப்படல் வேண்டும். இன்றைய நிலைமைகள், தேவைகள், சவால்கள் என்பவற்றுக்கேற்ப பல்கலைக்கழகக் கல்வியிலும் பாரிய மாற்றங்கள் தேவை என்பதையே இவ்வீழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது.

## பல்கலைக்கழகக் கல்வி நோக்கங்களில் ஏற்பட்டு வரும் புதிய மாற்றங்கள்

மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்சார்புடைய கற்கை நெறிகளுக்கு அப்பால் நோக்குமிடத்து இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உள்ள கலை, சமூக அறிவியல், மனிதப்பண்பியல் ஆகிய துறைகளில் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். இன்று வேலைவாய்ப்புப் பிரச்சினையை எதிர்நோக்கும் 25,000 பட்டதாரிகளில் 80 சதவீத மாணவர்கள் இத்துறைகளில் பட்டம் பெற்றவர்களாவர். எதிர்காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் 8,000 பட்டதாரிகளில் இவர்களே கணிசமான தொகையினர். தேசியரீதியாகவும் மாவட்டரீதியாகவும் திறமை சித்தி பெற்றுக் கடும் போட்டிக்கு மத்தியில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற இவர்கள் வழமையான முறையில் பட்டப்படிப்பைப் பயிலுவதால் வேலையின்மைப் பிரச்சினையையே எதிர்நோக்க வேண்டிவரும். இந்நிலையில், அண்மைக்காலங்களில் இத்துறையில் பயிலும் மாணவர்களும் தேசிய தொழிற்சந்தையின் தேவைகளைக் கருத்திற் கொண்ட முறையில் புதிய இலக்குகளைக் கொண்ட பல்கலைக்கழகக் கல்வியைப் பெறவேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றுள்ளது.

இலங்கையில் ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்விவரை உள்ள கல்விநிலைகள் அனைத்தும் அரசாங்கத்தாலேயே திட்டமிடப்படுகின்றன. இதனை சமூகமும் பெற்றோர்களும் மாணவர்களும் நன்கு அறிவர். அரசாங்கம் பொறுப்புடன் வகுத்துள்ள கல்வி முறை என்பதால், பெறுகின்ற கல்வி வாழ்க்கைக்குப் பயன்தரும்; கண்ணியமான தொழில் வாய்ப்புகள் கிட்டும் என்ற நம்பிக்கையுடனேயே பெற்றோர்கள் தமது பிள்ளைகளை உயர்கல்வி பெற அனுப்புகின்றனர். ஆனால் சித்தி எய்தி பட்டம் பெற்ற பின்னர் அவர்களுக்குக் கிடைக்கும் மற்றொரு பட்டம் 'இவர்கள் எந்த வேலைக்கும் பொருத்தமற்றவர்கள்' (unemployable) என்பதாகும். அத்துடன் ஏனைய உலக நாடுகளோடு மட்டுமன்றி சாதாரண வளர்முக நாடுகளோடும் ஒப்பிடும்போது இலங்கையில் பட்டதாரிகளின் தொகையும் பட்டதாரிமாணவர்களின் தொகையும் மிகக்குறைவு. உயர்கல்வி வயதெல்லையில் (19-23/24) 2 சதவீதத்துக்கும் குறைவானவர்களே இலங்கையில் உயர்கல்வி பெறுகின்றனர். இந்த குறைந்த தொகையினரான பட்டதாரிகளை உள்வாங்கமுடியாத நிலையில்தான் எமது பொருளாதார முறை உள்ளது. உயர்கல்வி பெறுவோரை உள்வாங்கும் முறையில் எமது பொருளாதார முறை வளர்ச்சி பெறவில்லை.

இந்நிலையில் கலை, மனிதப்பண்பியல் (மொழிகள், சமயம், பண்பாடு) சமூக அறிவியல் (பொருளியல், புவியியல், அரசறிவியல்) பட்டதாரி மாணவர்கள் இன்று பல்கலைக்கழக வாழ்க்கையின்போதே பல புதிய துறைகளில் திறன்களைப் பெறுதல் வேண்டும், அத்தகைய திறன்கள் தற்போது பொருளாதாரத்துறையில் மேலாதிக்கம் பெற்று வரும் தனியார் துறையினரால் பெரிதும் வேண்டப்படுவன என்று கருதப்படுகின்றது. இதுவரை காலமும் மாணவர்கள் மேற்குறிப்பிட்ட பாடங்களில் உயர்ந்த தேர்ச்சியைப் பெற்றால் போதுமானது என்று கருதப்பட்டது. ஆனால் இன்று உயர்கல்வி முறைமையானது குறிப்பாக கலை, சமூக அறிவியல் துறை சார்ந்த மாணவர்கள் பின்வரும் துறைகளிலும் தேர்ச்சி பெறுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலக நாடுகளின் உயர்கல்வி முறைகளில் பெரிதும் போற்றப்படும் இக்கல்வியின் புதிய இலக்குகள் இலங்கையின் உயர்கல்விக்கும் பொருத்தமானவையே!

அப்புதிய இலக்குகள் உண்மையில் 1991 இல் ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களின் சங்கம் நடாத்திய பலெர்மோ (Palermo) மகாநாட்டில் இடம் பெற்ற கலந்துரையாடல்களின் போது உருவாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. அப்புதிய இலக்குகளாவன:

- சிறந்த தொடர்பாடல் திறன்கள்
- கணிதம், விஞ்ஞானம் பற்றிய அடிப்படையான விளக்கம்

- சிறந்த தகவல் தொழில் நுட்பத்திறன்கள்
- பகுப்பாய்வுத் திறன், கருத்தியல் சிந்தனை, திறனாய்வுச் சிந்தனை
- ஆக்கத்திறனும் சுயமுயற்சித்திறனும்
- தொடர்ச்சியாக, வாழ்நாள் முழுவதும் கற்கவேண்டும் என்ற உளப்பாங்கு
- குழுக்களில் இணக்கமாகப் பணிபுரியும் திறனும் உளப்பாங்கும்
- ஆரோக்கியமான போட்டியை மகிழ்வுடன் ஏற்றல்
- சுய ஒழுங்கும் கட்டுப்பாடும் நெகிழ்ச்சித் தன்மையும்
- சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய புரிந்துணர்வு
- தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், பிரச்சினை தீர்க்கும் திறன்
- சிறந்த பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட மனப்பாங்கு

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு வரும் கல்விச் சீர்த்திருத்தங்கள் மேற்கண்ட புதிய இலக்குகளை ஓரளவுக்குக் கருத்திற் கொண்ட முறையில் அமைந்துள்ளன. பாட ஏற்பாட்டில் செய்யப்பட்டு வரும் மாற்றங்களின் காரணமாக மாணவர்கள் ஓரிருபாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெறுவதைத் தவிர்த்து கல்வி பயிலும் காலத்தில் (3,4) ஆண்டுகளில்) பல்வகைப்பட்ட மாறுபட்ட பாடங்களைப் பயில ஊக்கம் வழங்கப்படுகின்றது. வழமையான கற்கை நெறிகளோடு, அபிவிருத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடைய பிரயோக பாடங்கள் பல அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் புதிதாக ஆங்கில மொழிவழிப் பயிற்சி நெறிகள், தகவல் தொழில் நுட்ப வள நிலையங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. பயிற்சி நெறிகளின் தராதரங்களை உறுதி செய்யும் (Quality assurance) நடவடிக்கைகளும் விரிவுரையாளர்களுக்கான பணி நியமங்களும் (Work norms) உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்புதிய சீர்த்திருத்தங்கள் முழுவடிவம் பெற்று சிறந்த பெறுபேறுகள் பெறப்பட இம்மாறி வரும் பல்கலைக்கழக நோக்கங்கள், அவற்றை அடைவதற்கான நோக்கங்கள் பற்றிய புரிந்துணர்வு பல்கலைக்கழக மட்டத்தில் உள்ள ஆசிரியர், நிர்வாகிகள், மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி அனைத்து சமூக உறுப்பினர்களிடமும் ஏற்பட வேண்டிய அவசியம் உள்ளது.

# நூற்றிலொரு கல்லூரிக்குள்.......

வயல் நிறைந்த வாழ் நிலமும்
வானுயர்ந்த தெங்கு, பனை
அயல் அருளால் பாலிக்கும்
ஆலயங்கள் சூழ் மண்ணும்
கயல் வாழும் கடல் அணையும்
காசுப் பயிர் வளம் செழித்த
முயலுயர்ந்த எம் கூடம்
முத்தமிழ்போல் வாழி நீடு!

தீவகங்கள் திக்கெல்லாம்
தேர்ந்தெடுத்த மாணவரின்
காப்பரணாய் ஆகி நிதம்
கண்ணியமும் ஒழுக்கமுடன்
கல்வியினைப் புகட்டி எம்
நாப்பிறழா நல்வாழ்வை
நயமுடனே நாட்டி வைத்த
தாய் எங்கள் கலைக்கூடம்

ஆற்றல்மிகு ஆசாரும் ஆன்ற
அதிபருக்குள் திருவேதம்பு
நாற்றிசையின் பெரியோரால்
நற்கல்வி புகட்டி எமை
போற்றி வைத்த பொக்கிசமே
புகழ்குன்றாக் கலைக்கூடம்
நூற்றிலொரு கல்லூரிக்குள்
நோக்கிற் பெரும் இமயமதாம்

அழகுமிளிர் கட்டிடங்கள்
ஆய்வு நிறை செயற்கூடம்
விளையாட்டு திடலமைப்பும்
வினை தீர்க்கும் வைரவரும்
வந்தாரை வரவேற்று ஓம்பும்
வாழ் பூமி தனதாக்கி கற்பித்த
சிந்தனையின் சிற்பிகளாம்
சீராசார் நிறை கூடமதாம்

பண்ணிசையில் பயில்நுட்பு விவேகத்தில்
திண்ணியராய் புகழ்பூத்த செல்வங்களை
கண்ணிரண்டாய் கல்வி பெற்றுக்
கலையுலகில் தலை சிறந்தே
எண்ணிலடங்காது எம்மை
ஏற்றமுற வாழ்வு தந்த தாயாம்
வண்ணமுறத் திறமையினை வளர்த்த
வேலணைந்த கலைக்கூட்டம் வாழி நீடு!

**வை.க.தவமணிதாசன்**

# கல்லூரி முதல்வ மணிகள்

தொகுப்பு :- சி.வரதலிங்கம் (ஸ்ரீ)



கல்வியில் பெரியவன்
எந்தையர் தலைவன்
வித்தை செய்வதில் வல்லாளன்
வித்தியாலயத்தின் முதல் முதல்வன்



தமிழும் இவனே
அம்மா இவனே
அன்பும் இவனே



சலிப்பிலா உழைப்பு
உபாத்தியாயர்க்கு இலக்கணம்
ஆதாரம் ஆளுமையின் உறுதி
நாட்காட்டி பணி செய்யும்
சீர்வண்ணன் திறம்பாடி
மணிமகுடம் சூட்டிடுவோம்



சித்தமெல்லாம் பணியே
அவமே பொழுதறியார்
கடைசிவரை சிந்தித்தார்
கண்டதனைத் காண்பித்தார்
நித்தலும் கற்பித்தார்
நடமாடும் பள்ளி இவர்
கல்வியின் அரசனிவர்
எழுத்வாக்கியம் தான் உண்டோ!



திறமை
தியாகம்
தீவகம் மறவாத் தீரர்
இனியராகம்
ஆசிரியஜாம்பவான்



அமைதியே உருவானான்
சீரிய பண்பாளன்
கூரிய நுண்ணறிவால்
புகழாரம் பூண்டு
நீடு பாராட்டுப் பெற்றோன்
முடிகூட வணங்கும் திறலோன்
என்றும் ஜெயம் கொண்டான்.



பொறை
தன்னம்பிக்கை
தாயினுள்ளம்
சின்னத்தனமின்மை
வாளெதிர் துணிவு
வண்ணமீதுரைக்க வார்த்தையுண்டோ!



ராகங்கள் ரிதம் செய்யும்
ராஜநடை
செந்நா
திண்புயம்
வேங்கைக்கண்
அன்புள்ளம்



குன்றனையான்
கணமேதும் சோர்வடையான்
பண்பாளன்
காலகாலன்
சொல்லால் சிறந்தோன்
நீர் தருதெங் காவான்
மாசற்ற தங்கம்
நினைவழியா முகம்



இனிய தமிழ்
ஆரா அமுதமொழி
தேனிசையாய் பாயும்
எவரையா உனக்கீடு



சினமறியார்
நவம் நவமாய் பல செய்தார்
ராஜராஜன் இவர்
நடராஜரைகூட முழுக்காட்டிவித்தார்
தீமைகளை ரணம் செய்தார்
நன்றைந் தட்டமாட்டார்
உன்னதமான குணக்குன்றின்
பாதமலர் பணிவோம்



சவால் அஞ்சார்
கண் துஞ்சார்
நல் முதல்வர்
வீரயுக புருஷர்
எனபல நாமம் சூட்டிமகிழ்
மானமுள்ள தமிழன்
கோட்ட நாயகன்



கேடில் விழுச் செல்வம்
பாதாளம் தொட்டு விசும்பு தொடும்நுண்ணறிவு
ஆதாரம் இன்றி அலைந்த மாணவர்க்கு
ஆயுள் நாள் அர்ப்பணித்தார்
வெள்ளைமுதல்வன்
தூயமேலாளன்



கல்வியே உயிர் மூச்சு
ஏலாதது எதுவுமில்லை
தீராதமோகம் தீவின்பால்
எந்தரமும் பணிசெய்யும் ஏந்தல்
சுந்தரன் புகழ்பாடுவோம்



கனிவுடையார்
வீணே பொழுதைவிடார்
சாகசம் காட்டி பாசாங்கு செய்யார்
பலசாலி
மந்திரங்கள் இவர் வார்த்தை
தந்திரங்கள் மாய்ப்பார் - தாயை
மீண்டும் வாசம் செய்யவைத்தார்



அன்புடையான்
அருளுடையான்
அருணனது ஒளியுடையான்
செருக்கில்லான்
வாதம் புரிந்து சாதிப்பான்
கற்பதிலே நாட்டமுளான்
கற்பித்துத் தருவதிலே - தீரமிரு
ஆற்றல் அறிஞன்

# அரங்கப் பயணத்தில் 'ஆர்கொலோ சதுரர்'

நாடக அரங்கக் கல்லூரி தனது ஐந்தாவது ஆண்டு நிறைவை 'ஆர்கொலோ. சதுரர்' நடன நாடகத்தை தயாரித்தளித்து கொண்டாடியது, இருபத்தி ஐந்து வருட கால பயணத்தில் ஈழத்து நாடகத் துறையில் வகித்த பல்வேறு காத்திரமான பங்களிப்புக்கள் போன்று இந் நடன நாடகத்தையும் ஓர் புதிய கலை முயற்சியாக அது படைத்தது.

பரத நாட்டியத்தை அதன் வரையறைகளுக்குள் நின்று கொண்டு அதேவேளை அதற்குள் பொதிந்து கிடக்கும் நாடகப் பண்புகளை துலங்கச் செய்து ஓர் காத்திரமான கலைப்பொருளை கொண்டு வர இந் நாடகம் முயன்றது எனலாம்.

"இந் நடன நாடகத்திலே பாட்டில் வரும் சொல்லுக்குச் சொல் அபிநயம் பிடிக்காமல் சமூகத்துக்கான செய்தியைப் பரத முத்திரைகளூடாகச் சொல்ல விளைகிறோம். அதற்காகப் பரத முத்திரைகளை முற்று முழுதாகப் பிரயோகிக்காமல் உடலசைவால் வழங்கப்படும் உடல் மொழி மூலமாகவும் முன்னெடுத்த செய்தியை வழங்குகிறோம். பொதுவாக நாட்டிய நாடகங்களிலே பாத்திரங்கள் பேசுவதில்லை. ஆனால் இந்த நாடகத்தில் பாத்திரங்கள் பேசுகின்றன. அத்தோடு வேண்டப்பட்ட இடங்களில் ஜதிகளைப் பயன்படுத்துகிறோம்" என இவ் அரங்க முயற்சி பற்றி அதன் நெறியாளர் திருமதி.சாந்தினி சிவனேசன் குறிப்பிடுவதிலிருந்து இந் நாடகத்தின் வடிவத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள முடிகிறது.

பரத நாட்டியத்தை அடிப்படையாக வைத்து நாடகமொன்றை தயாரிக்கும் நீண்டகால விருப்பமானது இந்த நாடகத்தினூடாக நிறைவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். இதனை உருவாக்கியவர்களுள் முக்கியமான ஒருவரும் நாடக அரங்கக் கல்லூரியின் நிறைவேற்று இயக்குனருமாகிய கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள்.

மகாபாரதம் என்கின்ற மானுட இலக்கியத்திலிருந்து ஒரு துளியை - பாரதப் போரின் பதின்மூன்றாம் நாள் நிகழ்வைக் கருப் பொருளாக்கி இந்த நாடகத்தைத் தயாரிப்பதென முடிவு செய்யப்பட்டது, திருமதி. சாந்தினி சிவனேசன், திரு.தவநாதன் றொபேட், கவிஞர் இ.முருகையன், குழந்தை ம.சண்முகலிங்கம் என்கிற கலைஞர்களை இணைத்து, அவர்களின் எண்ணங்களையும், துறைசார் கலை வெளிப்பாடுகளையும் இணைத்து மாலையாகக் கோர்க்கும் பொறுப்பை வைத்திய கலாநிதி சா.சிவயோகன் ஏற்றிருந்தார். எழுத்துருவை உருவாக்கும் இக் கூட்டுப்படிமுறைகள் பூர்த்தியாக ஏறத்தாழ ஒன்பது மாதங்கள் தேவைப்பட்டன.

அடுத்தது நாடகத் தயாரிப்பு இந் நாடகத்துக்குத் தேவையான ஆற்றுகையாளர்களின் எண்ணிக்கை முப்பத்தி ஆறாகவும், இசைக் கலைஞர், பாடகர், குரல் வழங்கியோர், ஒலி,ஒளி, ஒப்பனை, காட்சி அமைப்பு கலைஞர் என இத் தயாரிப்புக்கான அணி செய் கலைஞர்களையும் சேர்த்து மொத்தம் அறுபது கலைஞர்களை திரட்டி ஒன்றிணைக்க வேண்டி இருந்தது. அத்தோடு இவ்வாறானதொரு பிரமாண்டமான தயாரிப்பை மேற்கொள்ளப் பெருந்தொகைப் பணமும் தேவையாக இருந்தது.

ஆரம்பத்தில் இவ்வாறான சவால்களை எதிர்கொண்டு இந் நாடகத்தைத் தயாரிப்பது குறித்துத் தயக்கம் இருந்த போதும் திரு. சிவயோகனின் நம்பிக்கையூட்டல்களும், உறுதிப்பாடும் கொடுத்த உத்வேகத்துடன் நாடக அரங்கக் கல்லூரி இந் நாடகத் தயாரிப்பில் இறங்கியது. திருமதி. சாந்தினி சிவனேசனின் அர்ப்பணிப்பான ஈடுபாடும், ஒத்துழைப்பும், தயாரிப்பு முயற்சிகளுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது அதேபோல இசைக்கு பொறுப்பாகவிருந்த திரு.த.றொபேட் வழங்கிய ஒத்துழைப்பும், ஈடுபாடும் இணைய மூன்று மாதகால கடின உழைப்பினூடு 2003ம் ஆண்டு தைமாதம் ஐந்தாம் திகதி பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் அழைக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட பார்வையாளருக்கான முதல் ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து அதேமாதம் இருபத்தி ஆறாம் திகதி காலையும் மாலையும் இரு ஆற்றுகைகளை கைலாசபதி கலையரங்கில் நாடக அரங்கக் கல்லூரி வழங்கியது.

நாடகத்தை தயாரிப்பதற்கு எந்தளவு கடின உழைப்புத் தேவைபட்டதோ அதேஅளவு கடுமையான உழைப்பு அதன் மேடையேற்றத்துக்கான முயற்சிகளுக்கும் தேவைப்பட்டன. நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்வது சவாலானதாக அமைந்தது. தாமாக முன்வந்து, நுழைவுச்சீட்டுக்களை வாங்கி நாடகங்களைப் பார்க்கும் மனோநிலை பார்வையாளரிடத்தே குறைவாக இருந்ததால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது.

அதிகரித்த தயாரிப்புச் செலவு காரணமாக குறைந்த கட்டணத்தில் நுழைவுச் சீட்டுக்களை வழங்க முடியாத நிலை ஒருபுறமும், பார்வையாளர் இன்றி நாடகத்தை ஆற்றுகை செய்வதிலுள்ள அர்த்தமற்ற நிலை மறுபுறமுமாக இக்கட்டான ஓர் நிலையை தோற்றுவித்தது. வர்த்தக நிறுவனங்களின் அனுசரனையும், பத்திரிகைகளின் விளம்பர அனுசரனையும் இச் சிக்கலுக்கான ஓரளவு தீர்வினைப் பெற்றுத் தந்தன.

தரமற்ற தென்னிந்தியச் சினிமாக்களுக்கும், நட்சத்திரக் கலை நிகழ்சிகளுக்கும் உற்சாகத்துடன் செலவு செய்யும் அதேவேளை அரங்க முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க பின்னடிக்கும் இவ்வாறான போக்கு நாடக வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக அமையப் போவதில்லை.

மேற்குறிப்பிட்ட போக்கின் பிரதிபலிப்பாக நாடகங்கள் ஓரிரு மேடைகளுடன் நின்றுவிடும் துர்ப்பாக்கிய நிலை கடந்த சில ஆண்டுகளாக யாழப்பாணத்தில் காணப்படுகிறது. பல்கலைக்கழகத் தயாரிப்புக்கள் கூட இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. ஒரு நாடகம் பல தடவைகள் மேடை ஏற்றப்படும் போதுதான் அதன் பேசு பொருள் மக்களிடையே பரவலடைகிறது. அத்துடன் அதில் பங்கேற்கும் நடிகர்கள், மற்றும் கலைஞர்கள் புதிய புதிய அரங்க அனுபவத்தை பெற்றுக்கொள்ளவும், புதிய உத்திகளையும், வடிவங்களையும் உருவாக்கவும் உதவிடும்.

ஆர்கொலோ சதுரர் நடன நாடகமும் தைமாத ஆற்றுகைக்குப் பின் அடுத்த ஆற்றுகைக்காகக் காத்திருந்தது. ஆற்றுகைக்குப் பின்பு நாடகம் பற்றி பாராட்டுகள், வரவேற்புகள் பத்திரிகை ஆக்கங்கள் வாயிலாகவும் நேரடியாகவும் வந்தபோதும் அதனை மேடைஏற்றுவதற்காக அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்த வேளை தான் நாடகத்தினை கொழும்பில் ஆற்றுகை செய்வதற்கான அழைப்புக்கிடைத்தது. யாழ்/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் சார்பாக அந்த அழைப்பினை நண்பர் தயாபரன் விடுத்தார். இதனை சிறந்த வாய்ப்பாகக் கருதினாலும், அறுபது கலைஞர்களை உள்ளடக்கிய இப் படைப்பினை கொழும்பு சென்று ஆற்றுகை செய்வதில் ஏற்படும் அதிக செலவினங்கள் குறித்து நண்பரிடம் விளக்கிய போதும் அவர் காட்டிய உறுதியும் ஆர்வமும் காரணமாக கொழும்பில் பங்குனி 30, 31ம் திகதிகளில் இதனை ஆற்றுகை செய்ய நாள் குறிக்கப்பட்டது.

இதனிடையே மீண்டுமொருமுறை நாடக அரங்கக்கல்லூரி, கைலாசபதி கலையரங்கில் பங்குனி 16ம் திகதி நாடகத்தை மேடை ஏற்றியது. கொழும்பு செல்வதற்கான ஏற்பாடுகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் துரிதமாக நடைபெற்றன. 29ம் திகதி கலை 9.00 மணிக்கு ஆரம்பமான நீண்ட பயணமானது கொழும்பு இராமகிருஷ்ண மிசனை இரவு 11.00க்கு சென்றடைந்தது. அங்கே நண்பர்கள் எமக்காக இரவு உணவுடன் காத்திருந்தார்கள். அவர்களின் உற்சாகமான வரவேற்புடன் சிறிய ஓய்வுக்குப் பின் மறுநாட்காலை ஒத்திகை பார்க்கப்பட்டது. அன்றிரவும் மறுநாள் இரவும் இராமகிருஷ்ண மண்டபத்தில் கொழும்பு வாழ் நாடக ஆர்வலர்களுக்காக ஆற்றுகை நடைபெற்றது. அது புதியதோர் அனுபவத்தை பெற்றுத்தந்தது.

29ம் திகதி இரவு 11 மணிக்கு கொழும்பு சென்றடைந்தது முதல் 31ம் திகதி நள்ளிரவு 11.45 மணிக்கு அங்கிருந்து யாழ்ப்பாணம் புறப்படும் வரை எமது குழுவினரை பழை மாணவர் சங்க நண்பர்கள் உபசரிப்புகளால் திணறடித்துவிட்டார்கள். அவர்கள் குறைந்த ஆளணியினராக இருந்தபோதும் நாடக ஆற்றுகைக்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் கச்சிதமாகச் செய்திருந்தார்கள். எமது நாடகத்துக்கு இசையமைப்பு வழங்கிய நண்பர் த.றொபேட் இது பற்றிக் குறிப்பிடும் போது இவ்வாறானதொரு சிறப்பான ஒழுங்கமைப்பை தான் இதுவரை சந்தித்ததில்லை எனக் குறிப்பிட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இவை அனைத்துக்கும் மேலாக இரண்டாம் நாள் ஆற்றுகையின் நிறைவில் கௌரவிப்பு நிகழ்வொன்றை ஒழுங்கு செய்து கலைஞர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசுகளை வழங்கி கௌரவித்தமையானது அவர்கள் எந்தளவுக்கு நாடகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதற்கு சான்றாகும். இவற்றை குறிப்பிடுவதன் நோக்கம் இவர்கள் தமது பாடசாலையை மட்டுமன்றி தமது பிரதேசக் கலை வடித்தையும் ஊக்குவிப்பதற்கு எந்தளவிற்கு ஆர்வமாக செயற்பட்டனர் என்பதை உணர்த்துவதற்கேயாகும். அவர்கள் விரும்பியிருப்பின் நாடகம் ஒன்றை இவ்வாறு மேடை ஏற்றுவதற்குப் பதிலாக இசை நிகழ்ச்சி ஒன்றையோ தற்போது கொழும்பில் அடிக்கடி நடத்தப்படுவது போல நட்சத்திரக் கலை நிகழ்ச்சி ஒன்றையோ நடத்தியிருக்க முடியும். ஆயினும் அவர்கள் அவ்வாறு சிந்திக்காமல் விட்டமையானது

தமிழ் நாடக உலகுக்கு இன்னும் ஆறுதலளிக்கும் ஓர் சைகையாகவே உள்ளது. இந்த இடத்தில் பழைய மாணவர் சங்கத்தினருக்கு நன்றிகளைத் தெரிவிப்பதில் நாடக அரங்கக் கல்லூரி பெருமையடைகிறது. இந்த உற்சாகத்தோடு நாடக அரங்கக் கல்லூரி மீண்டுமொருமுறை ஆனி 15ம் திகதி யாழ்ப்பாணத்தில் இரு காட்சிகளை ஆற்றுகை செய்து நாடகத்தின் ஒன்பது ஆற்றுகைகளைப் பூர்த்தி செய்தது.

இவ் ஆற்றுகைளினூடாக நாடகமானது பல கருத்துப்பரிமாறல்களை ஏற்படுத்தியிருந்ததை அவதானிக்க முடிந்தது. பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பல விமர்சனங்கள் வெளிவந்தன. அவை அனைத்தும் நாடகத்தின் கருத்தியல் பற்றியும் அதன் வடிவம் பற்றியும் கருத்துக்களை முன் வைத்திருந்தன.

அவற்றுள் சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

"பரத நாட்டியத்தினூடாகக் காத்திரமான வாழ்வியற் பிரச்சினைகளை விவாதிக்க முடியுமென்பதை இந் நாடகம் உணர்த்தி நிற்கிறது."

"..பழைய தொன்மத்தினூடாகப் புதிய சமூக விடயத்தைதினை முன்னெடுப்பதற்காகப் பரதக் கலையைத் துணைகொண்டுள்ளது. யாழ்ப்பாண நாடக வரலாற்றிலே புதியதொரு அத்தியாயத்தினைத் தொடக்கி வைத்துள்ளது"

"...நாடக வரலாற்றிலே அடுத்த பயணத்துக்கான ஆரம்பமாக விளங்குகிறது...."

".....பாரதப் போரின் 13ம் நாள் நிகழ்வை அடித்தளமாக்கி அதன் மேல் இன்றைய மக்களின் உள்ளத்தில் இருந்து வரும் கேள்விகளுக்கு விடைகூற முயலும் முயற்சியே இதன் இலக்கு.

இவ்வாறான பல அதிர்வுகளை தோற்றுவித்த இந் நடனநாடகம் வெறும் ஒன்பது மேடைகளுடன் நின்றுவிட்டமை துரதிஷ்டவசமானது மேலும் சில ஆயிரம் பார்வையாளர்களை அது சென்றடைந்திருப்பின் இன்னும் பல நல்ல விளைவை பெற்றிருக்கமுடியும். அந்தவகையில் இவ்வாறான பாரிய முயற்சிகளுடன் கூடிய கலை வடிவம் தனது குறிக்கோளை அடைந்துவிட்டதாகத் திருப்திப்பட முடியவில்லை இவை ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய பிரச்சினை. சிந்திக்க வேண்டும் ஆயினும் இப்படைப்பு ஈழத்து நாடக உலகில் சிறு தடம் பதித்திருப்பின் அது மகிழ்ச்சிக்குரியதே!

திரு.க.ஞானபாஸ்கரன்
யாழ் பல்கலைக்கழகம்

# இறக்கும் வரை...

"பாடசாலைகளிலோ, பல்கலைக்கழகங்களிலோ கற்று முடிந்தவுடன் கற்றலை நிறுத்திவிடக்கூடாது. இளமைப்பருவம்மட்டும்தான் கல்விக்குரிய பருவம் என்று எவரும் எண்ணக்கூடாது. இறக்கும் வரையும் கற்கவேண்டும்" என்று வள்ளுவர் வற்புறுத்துகின்றார். இறக்கும்வரை கற்கவேண்டும் என்று முதலில் கூறிய திறப்பாடும் இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிய பெருமையும் திருவள்ளுவருக்கே உரியன.

கல்வி கற்றவர்களுக்கு, ஏனையோருக்கு இல்லாத தனிப்பெருமை ஒன்றுண்டு. கற்றோருக்கு எந்த நாடும் சொந்த நாடாகும், எந்த ஊரும் சொந்தஊராகும் என்ற இந்தப் பெருமையை வள்ளுவர் கூறி மக்களைச் சாந்துணையும் கற்குமாறு தூண்டுகின்றார்.

"யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு."

கற்றவர்களுக்கு பிற நாடுகளும் பொருள் கொடுத்தும், வரவேற்பு நல்கியும் சிறப்புச் செய்வார்களாதலின் கல்விபோலச் சிறந்தது பிறிது இல்லை என்று பரிமேலழகர் வள்ளுவர் கூற்றை விளக்குகிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற அறிஞர்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கும் வந்து பல தொழில்களில் ஈடுபட்டனர். படித்து பட்டம் பெற்ற பலர் இப்பொழுது இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வேறு பல நாடுகளிலிருந்தும் பிற நாடுகளுக்கு சென்று அந்நாடுகளிலே தங்கள் கல்வித் தகமைக்கேற்ப்ப பல தொழில்களை செய்கின்றனர். இவர்கள் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, கயானா, நைஜீரியா, மலேசியா, புறூணை முதலிய பல நாடுகளில் பெரும் ஊதியம் பெற்று மதிப்புடன் பணியாற்றுகின்றனர்.

கல்வி கற்றவர்களுக்கு சிறப்புத் துறைகளில் நன்கு பயின்றவர்களுக்குத் தம் நாடுகளில் மட்டும்மன்றிப் பிற நாடுகளிலும் மதிப்பும் பணிபுரியும் வாய்ப்பும் உண்டு என்பதை நாம் இன்றும் நன்கு அறிகின்றோம்.

கற்றோர் பிறநாடுகளிலும் பெறும் இச்சிறப்பினை மூதுரை, நல்வழி முதலிய நூல்களும் எடுத்து விளக்கியுள.

"மன்னனுக்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லைக்
கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"

என மூதுரை கூறுகின்றது.

"ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை - அந்நாடு,
வேற்றுநா டாகா தமவேயா மாயினால்,
ஆற்றுணா வேண்டுவ தில"

இது நல்வழி செய்யுள்.

ஒவ்வொருவரும் "அறிவிறந்த" மக்களாகினால் மக்கள் வாழ்வு சிறப்படையும் என்ற அடிப்படைக் கொள்கையினையே திருக்குறள் அழுத்தந்திருத்தமாக உரைக்கின்றது. இதுதான் திருக்குறள் முழுவதிலும் இழையோடியுள்ள உயிர்நிலைக் கருத்து, இதனை உடன்பாட்டு முகத்தானும் எதிர்மறை முகத்தானும், பொதுவகையானும் சிறப்பு வகையானும் திருக்குறள் வலியுறுத்துகின்றது.

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலிய அதிகாரங்களில் கல்வியின் சிறப்பும், கல்வி கேள்விகளாற் பெறப்படும் அறிவின் சிறப்பும் படிப்போர் கேட்போர் உள்ளங்களை ஈர்க்கும் முறையிலே தீட்டிக் காட்டப்பட்டுள்ளன.

ஒருவனைப் பார்த்து "நீ ஒரு மிருகமடா" என்று கூறினால் அவன் எவ்வளவு கோபம் கொள்வான்? எவ்வளவு துன்பம் அடைவான்? இதற்குக் காரணம் என்ன? ஒரு மனிதனை மிருகம் என்று கூறுவதால் அவனை இழிவு படுத்துகின்றோம்; பழிக்கின்றோம்; இழிவுக்கும் பழிப்புக்கும் எல்லையிட்டுக் காட்டுகிறோம். எல்லோர்க்கும் நன்கு விளங்கும் இழிவுரை இது. இதனாலேயே மக்களை இழித்துரைக்க விரும்புவோர் "மாடு" "கழுதை" "குரங்கு" "எருமை"... என்று அவர்களை விலங்கினங்காளக்கிப் பேசுகின்ற வழக்கு உண்டாகி நிலைத்துள்ளது.

கற்றோருக்கும் கல்லாதோருக்கும் உள்ள வேறுபாட்டை மக்கள் உள்ளத்திற் பதிக்க விரும்பிய வள்ளுவர் எல்லோருக்கும் தெரிந்த இந்த இழிவுரையை நன்கு பயன்படுத்துகின்றார்.

கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உள்ள வேறுபாடு மக்களுக்கும் மிருகங்களுக்குமுள்ள வேறுபாட்டைப் போன்றது; கற்றவர்கள் மக்களைப் போன்றவர்கள்; கல்லாதவர்கள் விலங்குகளைப் போன்றவர்கள் என்கின்றனர் அவர்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு எனை யவர்"

என்பது அவர் வாக்கு.

ஒன்றின் பெருமையை நன்கு உணர்ந்தால் மட்டுமே மக்கள் அதனைப் பெற முயல்வார்கள். எனவே கல்வியின் பெருமையைப் பலவகையாக வள்ளுவர் விளக்குகின்றார்.

மக்கள் தங்கள் உடலிலுள்ள உறுப்புக்களிற் கண்ணையே சிறந்த உறுப்பாகப் போற்றுவர் "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்று நான்மணிக் கடிகை உரைக்கின்றது. கண்பார்வையால் அடையும் பயன்களை யாவரும் நன்கு அறிவர். எதை இழக்க விரும்பினாலும் கண்ணை எவரும் இழக்க விரும்பார். எனவே, கல்லாதவர் மிருகத்தைப் போன்றவர் என்று கூறியதால் மட்டும் கல்வியின் சிறப்பை நன்கு உணரமுடியாதவர்களுக்குக் "கல்விதான் மக்களுக்குக் கண்" என்றும் அறிவுறுத்துகின்றார் வள்ளுவர்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு."

கல்விதான் கண் என்றால். முகத்தில் கண்கள் இருக்கின்றனவே இவை வாழ்வுக்குப்பயன்படுமன்றோ என்றும் சிலர் கருதலாம். இவர்களுக்கு வள்ளுவர் பெருமான் கூறுவது யாது? கற்றவர்களே கண்ணுடையவர்கள். கல்லாதவர் முகத்தில் இருக்கும் இரு கண்களும் புண்களாகும்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

அறிவுக் கண் எவ்வகையிலும் ஊறுபடாது ஆனால் முகத்துக் கண் நோய் முதலியவை பலவற்றால் துன்பஞ் செய்யும் ஊனக் கண்ணாதலின் அதனைப் புண் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

கல்வியிலும் செல்வமே சிறந்தது; செல்வத்தால் மட்டுமே சிறந்த வாழ்வு-இன்பவாழ்வு வாழமுடியும். செல்வத்தைப் போல, வாழ்வுக்கு வேண்டியவாய்ப்புக்களைக் கல்வி கொடுக்காது. எனவே, கல்வி கற்பதைவிடுத்துச் செல்வத்தைத் தேடமுயல்வதே நல்லது. இந்த வாதம் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது எனினும், கல்விக்கும் - செல்வத்துக்கும், அறிவுடைமைக்கும் - பொருளுடைமைக்கும் உள்ள இந்த "மோதல்" இன்று பெரிதாகவுள்ளது.

வேலையில்லாது திண்டாடுவோரும், வறுமையாலே துடிப்போரும் பெருகும் இக்காலத்திலே கல்வியினையா பொருளினையா மக்கள் மதிப்பார்கள். ஐந்தாண்டு பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெறுதலையோ, ஐந்தாண்டில் ஐந்து இலட்சம் ரூபா ஈட்டுதலையோ இன்று மக்கள் விரும்பவர். "பொருள் வேண்டும், பெரும் பொருள் வேண்டும், விரைவில் வேண்டும் எவ்வழியிலேனும் வேண்டும்" என்பதே இன்றைய மக்களின் இதயத்துடிப்பு.

கல்விக்கும் அறிவுக்கும் உரிய மதிப்புக் கொடுக்காமல், பொருளுக்கு பெருமதிப்பு கொடுக்கப்பட்டமையால் இன்று உலகத்திலே போட்டி பொறாமை பூசல்கள் தாண்டவம் ஆடுகின்றன. சமவாய்ப்பின்றி சம வாழ்வின்றிச் சமுதாயம் அல்லற்படுகின்றது. தனி உடமையும் பொது உடமையும் போரிடுகின்றன. உழைப்பவன் ஓட்டாண்டி ஆகின்றான்; உழைக்காதவன் குபேரனாகின்றான். இத்தகைய சமூதாய அமைப்பு மாற்றம் பெற வேண்டுமெனின் பிறரின் நோயைத் தம் நோய்போல, பிறரின் வறுமையை தம் வறுமை போலக் கொள்ளும் அறிவுடையார் பெருக வேண்டும். பொருளுடைமைக்குக் கொடுக்கும் மதிப்பில் அறிவுடைமைக்கு மிகுந்த மதிப்பு கொடுக்க வேண்டும். இந்த பேருண்மையை மக்கள் மனதில் பதியச் செய்வதற்கு வள்ளுவர் பெருமான் பெரிதும் முயன்றுள்ளார்.

அறிவுடையவர்களே எல்லாச் செல்வமும் உடையவர்கள், அறிவில்லாதவர் எச்செல்வமுடையவரெனினும் ஒன்றும் இல்லாதவரை என்று உரைத்து அவர் அறிவுச் செல்வத்திற்கு தலை இடம் கொடுக்கின்றார். அறிவோடு சேராத பொருட்செல்வத்தைச் செல்வமன்று என்று அவர் கூறுகின்றார். கற்றவர்கள் அடைந்த வறுமையிலும் கல்லாதவர்கள் பெற்ற செல்வம் துன்பம் தருவது என்றும் தெகுட்டுகிறார்.

பகைவராலும் அழிக்க முடியாதது கல்விச் செல்வம்; பெற்ற பின் இழக்காத செல்வமும் கல்வியேயாகும். கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் மேலும் மேலும் பெருகும் செல்வம் கல்வியேயாகும். தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க ஒருவனுக்கு உதவும் செல்வமும் கல்வியேயாகும். கல்வியின் ஈடிணையற்ற இப்பெருமைகளை, "கேடில் விழுச்செல்வம்" என்ற தொடரில் காட்டுகிறார் திருவள்ளுவர்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

"கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றுரைத்துப் பொருட்செல்வம் கேடுள்ள செல்வம் என்பதையும் அவர் புலப்படுத்துகிறார். "கேடில் விழுச்செல்வம் என்று வள்ளுவர் சுருக்கி கூறியதனைப் பின்வரும் நாலடியார் செய்யுள் பகுதி விரித்து விளக்குகிறது.

"வைப்புழிக் கோட்படா வாய்த்து,யிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்."

பொருட் செல்வத்தைக் குறுக்குவழிகளிலும் பழி நிறைந்த வழிகளிலும் சேர்க்கலாம். கோடி ரூபா பரிசுள்ள ஒரு சீட்டுப் போட்டியில் ஒருவன் அப் பரிசைப் பெற்றால் அவன் உடனே செல்வனாவதை இன்று காண்கிறோம்.

கல்விச் செல்வத்தை உடனே பெறமுடியாது. ஏழையானலும் பொருளுடையவன் ஆனாலும் பாடுபட்டு படிப்படியாக கற்றுத்தான் கல்வியைப் பெறலாம். பொருளை ஈட்டுவதும் காப்பதும் துன்பத்துடன் கூடியன, அதனை இழந்துவிட்டால் ஒருவன் அடையும் துன்பத்திற்கு எல்லையில்லை. கல்வியைக் கற்றுவிட்டால் அதை எப்பொழுதும் இறக்கும் வரையும் இன்பத்தையே நல்கும், இம்மையில் மட்டுமன்றி அடுத்து ஏழு பிறப்புகளிலும் கல்வி உதவும் எனவும் வள்ளுவர் கூறிக் கல்விச் செல்வத்தின் நிலைபேற்றினை வற்புறுத்துகின்றார்.

கல்வியை தொடர்ந்தும் கற்க வேண்டும் இறக்கும் வரையும் கற்க வேண்டும் என்பதை மணற்கேணியில் ஊறும் நீரை நம் கண்முன் நிறுத்தி வள்ளுவர் விளக்கும் திறன் வியப்புக்குரியது.

மணற்கேணியை இலகுவாக தோண்டலாம் யாரும் தோண்டியும் பார்க்கலாம். தோண்டிக் கொண்டுபோக நீர் ஊறத்தொடங்கும். நீர் ஊறத்தொடங்கிய மட்டத்தில் இருந்து தோண்டத் தோண்ட, தோண்டும் அளவிற்கு நீர் ஊறும். இதனைப் போலவே கல்வியை மேலும் மேலும் கற்க கற்கும் அளவிற்கு அறிவு பெருகிக் கொண்டு போகும். இதனை எடுத்துரைக்கும் குறளை யாவரும் உள்ளத்தில் இருத்தல் வேண்டும்.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."

கற்கும் கல்வியை அரைகுறையாக கற்காமல் ஆழமாக கற்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார் வள்ளுவர். எல்லாவற்றையும் கற்கவும் முடியாது. எனவே, கற்க வேண்டியவற்றைத் தெரிந்து ஐயந்திரியறக் கற்கவேண்டும். எனக்கற்கும் முறையையும் அவர் விளக்கியுள்ளார். கற்றபடி வாழவேண்டும் என்றும் அவர் வற்புறுத்துகிறார்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்பதவர் கட்டளை.

மக்கள் இறக்கும் வரையும். கற்கவேண்டியவற்றைத் தொடர்ந்து நன்கு கற்க வேண்டும் என்பதை வற்புறுத்தி, அறிவுடையமக்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்கு வள்ளுவர் வழிவகுத்துள்ளார்.

**பேராசிரியர் கா.பொ. இரத்தினம்**

***

# எழுவாய் கதிரே எழுவாய்

**எழுந்த கதிர**

தீவின் கரையெல்லாம்
நீலக்கடல் விரிந்து
வானத்தை முத்தமிடும்
கண் பட்ட இடமெல்லாம்
வானும் கடலும் தான்
பார்! வையம் இவ்வளவே!

தீவகத்தாய்
அறிவுக் கண் மூடிக்கிடந்தாள்

நிலாப்பாடியது கேட்டது
"கடலம்மா
ஏன் இந்தத் தீவுகளை
அநாதரவாய் விட்டு விட்டாய்..."

பாட்டறியோம், படிப்பறியோம்
ஏடறியோம் எழுத்தறியோம்
அறிவுப் பசி மிகுந்து
அல்லலுற்ற வேளையிலே
எழுந்தது கதிர்!
எழுந்தது கதிர்!

கல்வி என்றால் ஆங்கில மொழிமூலக் கல்வி என்ற நிலை இருந்த காலம் கட்டணம் செலுத்திக்கற்கும் ஆங்கிலப் பாடசாலைகளும், சுய மொழிப்பாடசாலைகளும். என இருவகையான பாடசாலைகள். அக்காலத்தில் அதாவது ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தைந்தாம் ஆண்டளவில் ஆங்கிலக் கல்வியை இலவசமாகக் கற்க அப்போதய கல்வி அமைச்சர் C.W.W. கன்னங்கரா வழி சமைத்தார். இவரின்

கல்விக் கொள்கைப்படி தொகுதி தோறும் ஒரு அரசினர் மத்திய கல்லூரி என நிறுவப்பட்டது. அவற்றில் ஒன்றே எமது மத்திய கல்லூரி ஆகும். அன்று வரை வெறும் மேலோடும் நான்கு முழத்துண்டோடும் பாடசாலைக்குச் சென்றுவந்த மாணவர்கள் வேட்டியும் மேற்சட்டையும் போட்டுக் கொண்டனர், சிலர் நீண்ட காற்சட்டையும் சேட்டும் போட்டனர் மாணவிகள் தாவணிதான் இவை ஐயா சொன்னவை.

**;எழுகின்ற கதிர்**

கம்பன் பாரதி வள்ளுவன் இளங்கோ
கூடி விளையாடும் மைதானம்
சிறுவர்கள் பாட சிறுமியர் ஆட
நுண்கலை பயிலும் அரங்காகும்
போதனை செய்து சாதனை புரியும்
சிந்தனையாளரின் கூடாரம்
தரணியெங்கும் அறிவொளி வீசி
எழுகின்ற கதிரே எம்தாயே

**அது**

ஒரு கோடைக் காலம்
பௌர்ணமியின் பகற்பொழுது
வழமைபோல
கோவில்களெல்லாம்
புத்திரனார்க்கு
படிப்பும், கஞ்சியும்

**அன்று**

பாடுவோர் நா எழவில்லை
கஞ்சிக் கலசம் கவிண்டது
கணக்கர் நாளிது
கணக்கர் கடமைதவறாதவர்
தர்மராஜன்
எருமையோடு புறப்பட்டார்

ஊராத்துறையில்
இறங்கிய ஆமி
கோட்டையை நோக்கி
படையெடுக்கப்போகிறது
கோட்டை தீவுக்கு
எப்போதுமே வினை
நாற்றிசையும் செய்தி
தீவு நடுங்கியது
திக்கற்றுப் போனோம்
உயிரை மாத்திரம் பற்றிக் கொண்டு
ஊர்விட்டுப் போனோம்

சப்பாத்துக் கால்கள்
கல்லூரித் தாயின்
நெஞ்சை மிதித்தன
தீவு எங்கும்
நச்சு மரங்கள்
செழித்து வளர்ந்தன
புடையன்கள்
தீவைக்காவல் செய்தன
கல்லூரித்தாய்
இரத்தக் கண்ணீர் வடித்தாள்
திக்கெட்டும்
சிதறுண்டு போன
தன் மைந்தரை எண்ணித்
துடிக்கின்றாள்
எங்கிருந்தாலும் என்பிள்ளைகள்
நல்லாய் இருக்கட்டும்
தாய் முனகிக் கொண்டே
வாழ்த்துகின்றாள்

எழுகின்ற கதிர்
நோயுற்று எழுந்ததுவே!

ஈழப்போர் தொடங்கி அன்று வரை அந்நியரால் படையெடுப்பு பலமுறை நடை பெற்றது. குடாநாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் வாழும் மக்கள் அங்கும் இங்குமாக இடம் பெயர்ந்தும் மீளக்குடியமர்ந்தும் வாழ்ந்தனர். 1991ம் ஆண்டு வரை ஸ்ரீ லங்கா இராணுவம், இந்தியா இராணுவம் என படையெடுத்தபோதெல்லாம் தீவகமக்கள் இடம் பெயர்ந்தது இல்லை. பல்வேறு பிரதேச மக்களுக்கும் தீவகம் அடைக்கலம் கொடுத்தது. யாழ்ப்பாணக் கோட்டையில் அகப்பட்ட சிங்களச் சிப்பாய்களை மீட்டல் என்ற பேரில் 1991ம் ஆண்டு தீவு மண்ணில் சிங்கள இராணுவம் படையெடுத்தது அன்றைய ஸ்ரீலங்கா ஜனாதிபதி R. பிரேமதாசா

**எழும் கதிர்**

ஏழு தீவளந்து
ஏழு கண்டம் பரந்து
எழுவாய் கதிரே, எழுவாய்!

எழுமையும் இளமை பொங்க
ஈரேழுலகம் போற்ற
எழுவாய், கதிரே எழுவாய்!

பழுதிலாப் புதல்வர்
பல்லாயிரம் பெற்று
எழுவாய், கதிரே எழுவாய்!

களம் கண்ட நின் மைந்தர்
வளம் பெற்று வாழ
எழுவாய் கதிரே எழுவாய்

தொழுதோம் நினைப்
பலவாறு ஏற்றிப் பரவினோம்
எழுவாய், கதிரே எழுவாய்!

-சித்திரைபுத்தன்-

# நீரிழிவு நோய் Diabetes Melitus

இது முற்றாகக் குணப்படுத்தப்பட முடியாது ஆனால் எமது உணவுப் பழக்கத்தின் மூலமும் வாழ்க்கைமுறையினை மாற்றியமைப்பதன் மூலமும் மருந்தின் மூலமும் எமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்து எவ்வித பின்விளைவுகளும் இல்லாமல் சுகதேகியாக வாழ முடியும்.

இந் நோயானது எமது உடலின் அனுசேபம் (Metabolism) பாதிக்கப்பட்டுக் குருதியிலே குளுக்கோசானது உடற் தொழிற்பாட்டுக்குப் பயன்படுத்தப்பட முடியாமல் குருதியிலே அதன் செறிவு அதிகரித்துச் செல்வதுடன் சிறு நீரகத்தால் வடிக்கப்பட முடியாமல் இழக்கப்படுவதுமாகும். இது இன்சுலின் (insulin) எனும் ஓமோனின் உற்பத்திக் குறைவாலோ அல்லது அதன் தொழிற்படுதிறன் குறைவதனாலோ உருவாகின்றது.

இவ்வியாதியினை எமது கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிட்டால் எமது உடலின் சகல தொழிற்பாடுகளையும் பாதிக்கும்.

இந்நோயினை பின்வருமாறு முக்கியமான வகைகளாகப் பிரிக்கலாம்

1. நீரிழிவு நோய் வகை I (Type i) அல்லது இளமைக்கால நீரிழிவு நோய் (Juvenile onset diabetes melitus) அல்லது இன்சுலின் அளவில் தங்கியுள்ள நோய் (Insulin dependent diebetes melitus) பெரும்பாலும் 40 வயதிற்கு முதல் உருவாகும்.

2. நீரிழிவு நோய் வகை II (type ii) வயோதிபகாலத்தில் உருவாகும் இது இன்சுலின் அளவில் தங்கியிராத நோய் (Non insulin dependent diabetes melitus)

3. தாய்மைக்கால நீரிழிவு நோய் (gestational diabetes melitus)

4. பாதிப்படைந்த குளுக்கோசு தாங்குதிறன் Impaired glucose tolerance)

நீரிழிவு நோய்க்கான காரணிகளாக நாம் பின்வருவனவற்றை கருதலாம் வகை I (type i) இற்கான காரணிகள்

- சந்ததியாகக் கடத்தப்படலாம்
- சிறுவயதில் சுற்றாடலில் உள்ள நுண்ணங்கிகளுக்கு வெளிக்காட்டப் படாமல் வளர்க்கப்படுதல் (Lack of exposure to pathogenic organism in early child hood)
- வைரசுக்கள் (Viruses)
- சில உணவு வகைகள்

(குறிப்பாக குழந்தைப் பருவத்தில் தாய்ப்பாலிற்குப் பதில் பசுப்பாலைக் கொடுத்தல்)

- சதையியில் உண்டாகும் நோய்கள்
- மன அழுத்தத்தில் வாழ்பவர்கள்

வகை II இற்கான காரணிகளாக பின்வருவன கருதப்படுகின்றன

- சந்ததியாக கடத்தப்படுதல்
- வாழ்க்கைமுறை - அதிகமாக உண்ணல் குறைவாக வேலை செய்தல்
- அதிகளவு உடல் நிறை
- வயது அதிகமாக நோய் உண்டாகும் தன்மை அதிகரித்தல்

இதைவிட பெண்கள் தாய்மைக்காலத்தில் பின்வருவனவற்றை முக்கியமாகக் கருத்திற் கொள்ளவேண்டும்

1. முதற் பிரசவத்தின் போது நீரிழிவு நோயோ அல்லது குளுக்கோசு தாங்குதிறன் பாதிப்படைந்த நிலையோ (Impaired glucose tolerance) உருவாகியிருத்தல்

2. சந்ததியில் யாரேனும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருத்தல்

3. அதிகளவு உடல் நிறை

4. முந்தைய பிரசவத்தின் போது அதிகளவு நிறை உடைய குழந்தை பிறந்திருத்தல்

5. முந்தைய பிரசவத்தின் போது இறந்தகுழந்தை பிறந்திருத்தல் (Still birth)

6. தாயின் வயது 25 இற்கு மேற்பட்டிருத்தல்

7. அடிக்கடி சிறுநீர்த் தொற்றுவியாதி (Urinary trad infection) அல்லது வெள்ளைபடுதல் எனப்படும் நோய் (Candidiasis) உருவாதல்

இந்த நோய்க்கான அறிகுறிகள்

- வழமைக்கு மாறாக தாகம் அதிகரித்துக் காணப்படும்
- அதிகளவு சிறுநீர் கழித்தல் (குறிப்பாக இரவில்)
- ஆரம்பகாலத்தில் அதிகளவு வியர்வை
- உடல் நிறை குறைதல்
- கடி, சொறி போன்றவை உருவாதல்
- சிறுநீர்த் தொற்றுப் (UTI) போன்றவை உருவாதல்
- காயங்கள் ஏற்படின் குணமடைவதில் தாமதம் காணப்படல்

- கால் கை விரல்களில் வித்தியாசமான உணர்வுகள் நோவு போன்றவை உருவாகும் (இவை இரவில் அதிகரிக்கும் )
- மூட்டு வலிகள்
- கைகால்களில் தசைகள் சுருங்குதல்
- நீரிழிவுக் கோமா நிலை (Diabetic Ketoacidotic coma) இதன் போது நோயாளி மிகவும் உலர்ந்த நிலையில் தோல் கண் போன்றவை சுருங்கிக் காணப்படும். ஆழமான அதிகரித்த சுவாச வீதம் காணப்படும்.

எனவே மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் தென்படின் உங்கள் வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெற்று நோயினை இனங் கண்டு கொள்ளலாம்.

இதை குருதியில் குளுக்கோசு செறிவினை கண்டறிவதன் மூலம் அறிந்து கொள்ளலாம் இதை பின்வரும் 3 வழிகளில் செய்வார்கள்.

1. எழுந்தமானமான குளுக்கோசு செறிவு (Random blood Sugar )
   11.1 mmol/L ஐ விட அதிகமாக உள்ள போது)

2. விரதம் இருந்து பெறும் குளக்கோசு செறிவு (Fasting blood suar)
   7.0 mmol/L ஐ விடக்கூடியுள்ள போது

அல்லது

3. 75g குளுக்கோசை உண்டபின் 2 மணித்தியாலத்தில் பெறப்படும் அளவு (Postprandial blood sugar) 11.1 mmol/L ஐ விடக்கூடும் போது இவ்வாறு நோயினை இனங் காணப்பட்டால் பின்வரும் கட்டுப்பாட்டு மற்றும் மருந்து வகைகளைப் பாவிக்க வேண்டும்.

- இளமைக்கால நீரிழிவு நோயாளியானால் (Type I)
  உணவுக்கட்டுப்பாட்டுடன் இன்சுலின் பாவிக்க வேண்டிவரும்

- வயோதிப கால நீரிழிவு நோயாளியானால் (Type II)
  உணவுக்கட்டுப்பாடு மட்டும் அல்லது
  உணவுக்கட்டுப்பாடு + மாத்திரை (Oral hypoglycamics (metformin Glibenglamile)

  அல்லது

  உணவுக்கட்டுப்பாடு + insulin (இன்சுலின்)

- தாய்மைக்கால நீரிழிவு நோயாளிகளானால் உணவுக்கட்டுப்பாடு + இன்சுலின்

மாத்திரைகளோ இன்சுலினோ வைத்தியரின் அறிவுறுத்தலின்படிதான் உபயோகிக்க வேண்டும் உணவு வகைகளைப் பொறுத்த மட்டில் மிக முக்கியமாக 3 வகையான உணவு வகைகளை நோயாளிகள் அறிந்திருக்க வேண்டும்.

1. தவிர்க்கப்பட வேண்டியவை
(சுத்தமாக்கப்பட்ட இனிப்பு வகை) Refinel Sugar
சீனி, சர்க்கரை, இனிப்புப்பண்டங்கள், குளிர்களி போன்றவை

2. ஓரளவு (மிதமான - Moderate amount) பாவிக்கப்படக்கூடியவை
   - தவிடு நீக்கப்படாத அரிசி அதில் தயாரிக்கப்பட்ட உணவுகள்
   - ஆட்டா மாவு, வெதுப்பி
   - பழங்கள், பழச்சாறுகள், சூப்புவகைகள்
   - வெண்ணெய், பட்டர் (Butter, Cheese)
   - கிழங்குவகை, இறைச்சி

3. போதியளவு உண்ணக் கூடியவை
மரக்கறிகள், சிறிய மீன்வகை, முட்டை வெள்ளைக்கரு, தக்காளி, தேசிக்காய்ச் சாறுகள்

உணவை 3 தடவைகள் அதிகளவு உண்ணாமல் சிறிய அளவுகளில் 5 தடவைகள் உண்ணலாம். இது மிகவும் இலகுவான முறை. இவ் உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடியுங்கள்

இதைவிட நோயாளிகள் தங்கள் கண்பார்வையைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இடையிடையே வைத்தியரிடம் சென்று Funduscopy செய்வது நல்லது.

அடுத்ததாக உங்கள் கால்களை முகத்தைப் போல பாதுகாக்க வேண்டும். சுத்தமாக வைத்திருக்க வேண்டும். விரலிடுக்களைச் சுத்தம் செய்ய வேண்டும். நகங்களை அளவாக நறுக்க வேண்டும். எப்போதும் அளவான பாதணிகளை அணிந்திருக்க வேண்டும். புதிய பாதணிகளை நீண்ட நேரம் அணியக் கூடாது.

மாதம் ஒரு தடவையாவது குளுக்கோசு செறிவினை குருதியில் அறிந்து அதற்கேற்றவாறு உணவுப் பழக்கத்தையும் மருந்தின் அளவையும் மாற்றிக் கொள்ள வேண்டும். அளவான உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

நன்றி

நல்லையா சசிகேசவன்

## நிர்வாக சபை உறுப்பினர்கள்



நிற்பவர்கள் : திரு.K.குகசிலன், திரு.T.திருஞானசம்பந்தன், திரு.V.விஜயகுமாரன், திரு.T.அருந்தவநாதன், திரு.T.லோகநாதன், திரு.S.குகநாதன் (உபதலைவர்), திரு.S.பாலேந்திரன், திரு.P.சிவமணி, திரு.S. தயாபரன்

இருப்பவர்கள் : திரு.S.வரதலிங்கம் (பொருளாளர்), திரு.K.P.தயாபரன் (உபதலைவர்), திரு.R.சுந்தரமூர்த்தி (தலைவர்), திருமதி.V.அரசரட்ணம் (உபதலைவர்), திருமதி.P.பாலகுமாரன் (உபசெயலாளர்), திருமதி.A.வீரசிங்கம் E. சபேசன் (செயலாளர்)

சமூகமளிக்காதோர் : திரு.G.பரமானந்தன், திருமதி.S.கலைவாணி, திரு.K.ஜெகதீசன், திரு.T.சண்முகமணி, திரு.V.சுகிர்தன்

# விழாக் குழு



நிற்பவர்கள் : திரு.V.விஜயகுமாரன், Dr.N.சசிகேசன், திரு.P.றமேஸ்,

இருப்பவர்கள் : திரு.S.வரதலிங்கம், திருமதி.T.பாலகுமாரன், திருமதி.அ.வீரசிங்கம், திரு.P.சிவமணி.

பிரசன்னமாகாதவர் : திரு.S.ஸ்ரீரங்கநாதன்.


## மலர்க் குழு



திரு.T.திருஞானசம்பந்தன், திரு.S.தயாபரன், திருமதி.V.அரசரத்தினம், திரு.S.பாலேந்திரன்,

பிரசன்னமாகாதவர்கள் : திரு.G.பரமானந்தன், திரு.K.தவமணிதாசன்

# தமிழினி




யா/வேலணை சேர வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தின்
(வேலணை மத்திய கல்லூரி) பழைய மாணவர் சங்கம் கொழும்பின் 9வது ஆண்டு
நிறைவு விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 31.03.2002இல் நடைபெற்றபோது
இடம் பெற்ற நாட்டிய நிகழ்வில் அமரர் தமிழினி வீரசிங்கத்தின் ஒரு காட்சி

# தமிழினி

நாம் 10வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடி "எழுகதிர் 2003" நூலை வெளியிடும் இச்சந்தர்ப்பத்தில் கடந்த ஆண்டு விழாவையும் நூல்வெளியீட்டையும் எண்ணாமல் இருக்கமுடியாது. காரணம் கடந்த ஆண்டுதான் நம் ஆண்டுவிழாவை "முத்தமிழ்" விழாவாகக் கொண்டாடியதும் மலருக்கு எழுகதிர் என பெயர்சூட்டி வெளியிட்டதுமாகும். "முத்தமிழ் விழா" என தலைப்பிட்டது திரு.வேலணை வீரசிங்கம் அவர்கள். விழாவும் இயல், இசை, நாடக அரங்காக மிளிர்ந்தது. நாட்டிய நிகழ்சியை தமிழினி, இளவரசி சகோதரிகள் ஆற்றினார்கள். இன்று எம்மிடையே தமிழினி இல்லை. இன்றைய விழாக் குதூகலத்தில் தமிழினியின் நினைவு நெஞ்சை உறுத்துகிறது.

வேலணை வீரசிங்கம் - அமராவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி. தமிழினி. திரு.வேலணை வீரசிங்கம் பல்துறை ஆற்றல் நிரம்பப்பெற்றவராயினும் தனது சமூகப்பணியால் எல்லோராலும் அறியப்பட்டவர். திருமதி. அமராவதி வீரசிங்கம் எமது கல்லூரியின் பழைய மாணவியும் இன்று எமது சங்கத்தின் ஆட்சிமன்ற உறுப்பினரும் ஆவார். தமிழினி தனது தாயை மகிழ்விக்க எம்மை மகிழ்வித்து எம் அன்னையின் விழாவில் நடனமாடினார். ஆம் அந்த நாட்கள் தமிழினியின் குழந்தை உள்ளம் அன்பின் பேரால் வஞ்சிக்கப்பட்டிருந்தது! உள்ளக்குமுறலை அடக்கி அரங்கைச் சிறப்பித்தார். தமிழினி ஒரு தனியன் அல்ல. பகுத்தறிவால் ஈர்க்கப்பட்ட பலம்மிக்க தந்தை, பாசமுள்ள அன்னை எல்லாவற்றிற்கும் மேலாக கல்வியால் உயர்ந்து செல்வம் சேர்க்கும் வீரமிக்க அண்ணன்மார், அன்புத் தங்கை ஆகியோரின் செல்லப் பெண் எமக்கும் இனிய தங்கை.

விதிவலிதோ விஞ்ஞானப் பட்டதாரியான தமிழினி இயற்கையிலேயே கவி உள்ளம் கொண்டவர் கல்லூரி விழாக்களிலும், இலக்கிய விழாக்களிலும் கவிதை பாடியுள்ளார். இவ்வளவு ஆற்றலும் அறிவும் இருந்தும் ........................... . ஊரவர்கள் உறவினர்களைக் கண்டால் பூரிப்புடன் வரவேற்கும் தமிழினியின் இனிய முகமும் நினைவில் எம்மைவிட்டகலாது. இவரைச் சிறப்பான மாணவர் என்று தெரிவு செய்த இவரது கல்லூரி அதிபர் வாழ்த்தி வழங்கிய வாழ்த்துப்பாவில் சில வரிகள்

"....நீ பாரதி கண்ணம்மா நீ பாவேந்தர் தமிழம்மா
நீ வெள்ளைத்தாமரை நீ வேலணை வேல் விழி
நீ வில்லிபுத்தூர் ஆண்டாள்......"

-S.குகநாதன்-

# L.V.Singarayer
## Managing Director

**CITY MEDICAL SERVICES (PVT) LTD.**
**PRIME PHARMA INTN'L (PVT) LTD.**
**PRINCE JEWELLERS (PVT) LTD.**
**CITY MEDICALS - JAFFNA**

149,
New Chetty Street,
Colombo - 13,
Sri Lanka.

Tel : 2434494, 2441163-4
Direct : 2438925
Mobile : 0777-780359
Fax : 2433867, 2576683
E-mail : citymed@sltnet.lk

*CM GROUP OF COMPANIES*

# VASHANNA Jewellers
Dealers In Quality Gold Jewellery

வாசனா ஜுவலர்ஸ் වාසනා ජුවලර්ස්

Tel : 2380700,
4-713473
Fax : 4-713473

11/18, Gold Plaza, Sea Street,
Colombo - 11.
Sri Lanka.

# NATHAN
Jewellery
Dealers in 22Kt Gold Gems & Diamonds

11/1/20, Gold Plaza Complex, Sea Street, Colombo - 11

[illegible]
11/1/20, [illegible]
[illegible]-11

நாதன் ஜுவலர்ஸ்
11/1/20, கோல்ட் பிளாசா
செட்டியார் வீதி கொழும்பு - 11

☎4-713502

## Sri Nivasaa Traders

***Wholesale***

***& Retail General Merchants &***

***Commission Agents***

Phone : 2323209

[redacted]

No. 211, Prince Street,
Colombo - 11

# S.H.TEXTILES

Specialist

**In**

**Thread** **Zippers**

**ASTRA SUN** **HERO MCL TEX**

*And Other Tailoring Items*

No. 214, 2nd Cross Street,
Colombo - 11

☎ 2421407
2382991

# U & R TRADER

*General Merchant & Commission Agent.*
*Wholesale & Retail Dealer In Food stuff*

No. 171, 5th Cross Street,
Colombo - 11.

Tel : 2436227
2382990

**M. Naushad J.P**
Managing partner

## HARA ENTERPRISE

*Importers of All kind of Garments and tailoring acc*

250, Second cross Street,
Colombo 11,
Sri Lanka.

Tel: 94-1-423584 Fax : 94-1-541089
E-mail: hara@eureka.lk
Mobile :0777-788328, Res :94-1348413

## T.M.B. ENTERPRISE

General Merchants & Commission Agents
Wholesale Dealers in Rice & Ceylon Produce

Phone : 2448874, 2338239

18, 4th Cross Street,
Colombo - 11.

எமது இனிய வாழ்த்துக்கள்

# HOTEL MAIYURI

451, Galle Road, Wellawatta
Colombo - 06

*With Best Compliment of*

# *D.L. WHITE*

*07, Priya Avenue,*
*Kohuwela.*

*விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்*

*R.Rajasaruban*
*Propriter*

# *Vasantham Foods*

*INDIAN SWEETS, SNACKS & PALMARAH FOODS*
*100% Vegetarian Foods*





***Indian Sweets * Jaffna Snacks *Mixture**

423, Galle Road,
Wellawatte, Colombo - 06.
Tel : 0112 506575 Mobile : 0777-702673

மேலும் தங்கள் பணி சிறக்கட்டும்

# SRI RANGAA TRADE CENTRE

***GENERAL MERCHANTS &***
***COMMISSION AGENTS***
***WHOLESALE DEALERS IN RICE &***
***CEYLON PRODUCE***

*NO. 187, 5TH CROSS STREET, COLOMBO - 11*

*TEL : 2399837, 5364904, 777-517114,*

**COLOMBO**
*Maney Exchange (Pvt) Ltd.*
**AUTHORISED FOREIGN CURRENCY**

MONEY CHANGER
PERMIT No. IN/AUT/MC/89

No. 96, CHATHAM STREET,
COLOMBO - 01.

☎ 2438626
2438627

**SPRINT TRAVELS & TOURS**

*Approved by Ceylon Tourist board and*
*Department of Civil Aviation*

Tel : 2390226, 2389388
Fax : 2389388
E-mail : sprinttravels@hotmail.com

#21, Macan Marker Arcade,
Galle Road, Colombo - 03.
Sri Lanka.

**உலகை வலம்வர உறுதுணை புரியும் Sri Lankan Airlines**
**நிறுவனத்தின் முதல்தர முகவராக இருமுறை (2001-2002, 2002-2003)**
**தெரிவுசெய்யப்பட்ட நிறுவனம்**

***SHAN TRAVELS & TOURS***

Shan Travels & Tours (Pvt) Ltd.
# 57 B1 Basement Floor (கீழ்மாடியில்)
Bristol Building
York Street, Colombo - 01
Tel : 2380850, 238055, 2321739, Fax : 2447563

# PRASANNA
MONEY EXCHANGE (PVT) LTD.

**MONEY CHANGER**
**PERMIT NO. IN/AUT/MC/58**

No. 42A, Mudalige mawatha,
Colombo -01.

Tel : 4712246, 2422049, 2334800
Fax : 2439285


# SHANMUGA TRADE CENTRE
*General Merchants & Commission Agents*
*No. 117, 5th Cross Street, Colombo - 11.*

**Telephone : 2330335**

# A.T. Merchants (Pvt) Ltd.
**Importers, General Merchants &**
**Commission Agent**

**Shop No. 45, 4th Cross Street, Colombo 11. Tel : 2541061, 2541062**
**Office : No. 50/1, St.James Peiris Mawatha, Colombo - 02.**
**Tel : 2314601-5, Fax : 2449893**

# எனது இனிய நல் வாழ்த்துக்கள்



K.K.Raveenthiran

தானத்தில் சிறந்த தானம் வித்யாதானம்

S.R.AGENCY

288, SEA STREET

COLOMBO .11

PREMAWARDHANAA

TEA STORE

DEALERS IN TEA & PAPER BAGS

No. 8, St.JOHN'S ROAD, COLOMBO - 11.

TELEPHONE : 2445039

இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்

# N.S.P.S

## New Sai Premawardhana Stores

**General Merchants
and
Commission Agents**

**Tel : 2335719
No.6, St.John's Road,
Colombo - 11**

*With Best Compliments From :*

# ABI TRADERS

## *Exports & Imports*

**IMPORTERS OF DEALERS IN**

**EVERY DAY, ANUPAM STOVES, HURRICANE LANTERN, KORAI MATS, POLY CARPETS, MATS AND PLASTIC CHAIRS & NATRAJ MATHEMATICAL INSTRUMENTS BOX**

Office :
U6, Anderson Flats,
Narahenpita,
Colombo - 05
Tel : 2598268, 4716740
Fax : 2391057
E-mail : abitra@sltnet.lk

Branch :
L.G. 182, People's Park,
Shopping Complex,
Colombo - 11.
Tel : 2421521, 4724549
Fax : 4616534

எழில் பொங்க எழுக

KMT

# K.M.T. TRADE CENTRE

GEBERAL MERCHANTS

**22, St, John's Road, Colombo - 11.**
**Phone : 2447718, 2342020**

*எழுகதிர் எங்கும் ஒளி வீசட்டும்*

# BRIGHTEN REST

* SPACIOUS A/C & NON A/C ROOMS WITH HOT WATER TAP, T.V., I.D.D., FAX, AND MINI FRIDGE. * TASTY FOOD AND HOMELY ATMOSPHERE. * SITUATED IN THE HEART OF BUSINESS TOWN. * TRANSPORT, TOUR BOOKINGS, AND AIRLINES RESERVATIONS ARE SOME OF THE FACILITIES PROVIDED.

*214/2, Messenger Street, Colombo - 12, Sri Lanka.*
*Telephone : 2437789, 2329664 Fax : 4610765*

Uthaya Agencey

**General Merchant**
**&**
**Commission Agents**
**for**
**Local Produces**

Tel : 2437018
2422584

111, 4TH CROSS STREET,
COLOMBMO - 11

ஒளியிழந்த நாட்டிலே நின்றேற்றும் உதய ஞாயிறு
ஒப்பவே வாவாவா.

# SIVASAKTHI STORES

## சிவசக்த்தி ஸ்டோர்ஸ்

***226/3-P, Andival Street, Off. Sea Street,***
***Colombo - 13. Tel : 2452965***

# MENAN TRADING CO.

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

Tel : 2324092

NO. 82, 4TH, CROSS STREET,
NO.208, PRINCE STREET,
COLOMBO - 11.

# NEW
# MAYURAPATHY

No.274, P.Keyzer Street,
Colombo - 11.
Tel : 4-713990

எழுகதிருக்கு எமது வாழ்த்துக்கள்

# Gnanamani & Co.

WHOLESALE & RETAIL
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

G.M

No: 210, Prince Street
Colombo - 11.
T.P: 2421034

எமது இனிய வாழ்த்துக்கள்

# WALES AUTO SPARES

No: 15, Prince of Wales Avenue,
Colombo - 14.
Phone: 2347275

*இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்*

# NEW LUXUMI TRADE CENTRE

*General Merchants & Commission Agent*

144, Maliban Street, Colombo - 11
Phone: 2438465, 4-721637

"எழுகதிர் 2003" பொலிவுற எம் வாழ்த்துக்கள்

# SOORYAA TRADES

*215 -B , PRINCE STREET,*
*COLOMBO - 11.*
*T.P: 2380926*

# A.K.L.T TRADE CENTRE

A.K.L.T

*General Merchants, Commission Agents*

அரிசி RICE

**216, PRINCE STREET,**
**COLOMBO - 11.**

2430704
2327009

தங்கள் கல்விப் பணி தொடரட்டும்

# P.SIVAMANY J.P

# பொன். சிவமணி .ஜே. பி

*No:188, New Chetty Street,*
*Colombo -13.*
*Phone: 5334262,*
*5365958, 2348367*

எழுகதிருக்கு வாழ்த்துக்கள்

**RAMSETHU & CO.**

Importers, General Merchants
& Commission Agents
*No: 65, $4^{th}$ Cross Street, Colombo -11, Sri Lanka.*
*Phone: 2323686, 2380374, 0777-344272*
*e-mail :- esanbaby@yahoo.com*

ST 135

**SAINUGAS**

Rice

**135, $5^{Th}$ Cross Street,**
**Colombo -11.**
**Tel : 2344990**

*தானத்தில் சிறந்த தானம் வித்தியாதானம்*

**MRS.K.SIVASAMBU**

188, NEW CHETTY STREET,
COLOMBO - 13

*With Best Compliments From*

**Robin Stores**

றொபின் ஸ்டோர்ஸ்

Wholesale & Retail Dealers
**66,Manning Market**
**Pettah, Colombo - 11**
**T.P: 2391624**

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்

**KARUMARIY TRADERS**

*General Merchants, Wholesale & Retail*

100/ 108A, Manning Market, Pettah, Colombo -11.
Tel : 2344146

எமது இனிய வாழ்த்துக்கள்
வாழ்த்துவோர்

**VM**
**25**
**SALT**

V. MANICKAM & BRO
General Merchants & Commission Agents , No: 25, Manning Market,
Colombo-11, Tel : 011-2348367

*With Best Compliments From*

**V.Manickam & Brother**

IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

*SUGAR* *RICE*

Tel : 2323408, 2323986, 2432347
Fax : 2421972.
Telegrams : Thavayoga

34,4TH CROSS STREET,
COLOMBO-11.

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ கதிரேசன் லொட்ஜ்**

- சமையல் வசதி
- பிரயாண வாகன வசதி
- வெளிநாட்டு, உள்நாட்டு தொலைபேசி வசதி
- நாள் மாத வாடகை

48/2, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு - 13
தொ.பே: 2331038, 2334219, 2434146, 5-330254, 4-612933, 5330256

எழுகதிர் ஒளி வீசட்டும்

## PRATHA TRADING CO.

- ★ Suppliers To Confectioners & Bakers
- ★ Importers Of All Kinds Of Food, Colours, Essences, Chemicals ete.
- ★ Commission Agents

No: 64, Dam Street, Colmbo - 12

Phone: 2445626 , 4615185

உளமார்ந்த வாழ்த்துக்கள்

## B.S.G MOTOR WORKS

Mechanical, Electrical, Airconditioning, Tinkering
Painting & Upholstering Works

33, Sri Gunananda Mawatha, Kotahena. Colombo -13.
T.P:2337853 - 2446704

*With best compliments from*

## PETTAH ESSENCE SUPPLIERS

Importers and Distributors of Raw Materials for Biscuits, Bakery Products, Confectioneries, Ice Cream, Yougurt, Hotel products, Jam, Soft Drinks & Fruit Drinks Etc.

| | | | |
|---|---|---|---|
| Full Cream | Acid Sodium | Shortening | S.C.M.C |
| Skimmed Milk | Butter Ghee | Canned Foods | Sodium Benziode |
| Whey Powder | Liquid Glucose | Imported Sauces | Pottasium Sorbate |
| Lesathine | Gelatine | Jelly Crystals | Essences |
| Malt Extract | Corn Flour | Cake Ingredients | Colouring |
| Citric Acid | Cocoa Powder | Baking Powder | Vegetable Ghee |
| Sodium Bicarb | Margarine | Icing Sugar | Pectin |

**19,DAM STREET, COLOMBO - 12**

**Tel : 2326235, 2449269, 2441721, Fax : 2434859, 2441721**

**Overseas Automotive Pvt. Ltd.**

*IMPORTERS & DEALERS FOR*

*Tata, Leyland, M/F Spare Parts & Accessories*

No. 368/5, Sri Sangaraja Mawatha, Colombo - 10
Phone : 2335012, 2338492, 2422606
Fax 0094-74-610782, 00941-348050, E-mail-seaover@sltnet.lk.

**J.K.TRADINGCO.**

Importers, Exporters & General Merchants
Dealers in Polythene Polyprophlene, Shopping Bags
Grocery Bags, Lunch Sheet and Straws Etc.

103A, Bankshall Street, Colombo - 11 Tel : 2421259, 2338954
Fax : 94 - 1-387705, E-mail jkimport@yahoo.com. 105@37.com

**MODERN PLASTICS CENTRE**

*DiStributor for*

***F.M.J.PLASTICS, YOGHURT CUPS AND ALL PLASTICS ITEMS***

No.60, DAM STREET,
COLOMBO - 12
SRI LANKA.

PHONE : 2320296
2433018

**New Mayuragiri Traders**

General Merchants & Commission Agents
Wholesale & Retail Dealers in Rice & Ceylon Products

நியூ மயூரகிரி டிரேடர்ஸ்

No. 28, St.John's Road,
Colombo - 11.

T'phone : 2330122
4-718698

எழுகதிருக்கு எம் வாழ்த்து

# RAJAN AGENCEY


General Merchants & Commission Agents
Wholesale Dealers in Rice & Ceylon Produce, Co- Op suppliers


189, 5TH CROSS STREET,
COLOMBO - 11,

TEL : 2320331, 2384331
4713685

# Raj Travels and Tours (Pvt) Ltd.

57B-1, Basement,
York Street, Colombo - 01
Phone : (off) 2387029, (res). 01-2515445
Fax : 01- 2387030, Mobile : 077-6104862
E-mail : rajtravels@e-mnet.com





# வாழ்க


# வளமுடன்

*நலன் விரும்பி*

எழுகதிர் எழில் பொங்க மலரட்டும்

# BROWNSON

# INDUSTRIES



139, BANKSHALL STREET,
COLOMBO - 11
TEL : 2327197



# இதயம் கனிந்த நன்றிகள்!



* எமது அழைப்பை ஏற்று வருகைதந்த திரு. வி. ரி. தமிழ்மாறன் அவர்கட்கும்,
* மலர்வெளியீட்டுரை செய்த பேராசிரியர் கா.பொ.இரத்தினம் அவர்கட்கும்,
* சிறப்புரையாற்றிய அதிபர் திரு.பொ.அருனகிரிநாதன் அவர்கட்கும்,
* தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும்,
* மல்ருக்கான ஆசியுரை, கட்டுரை கவிதை நல்கிய பெரியோர்கள், அறிஞர்கள், பழைய மாணவர்களுக்கும்,
* விழா நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்த அனைத்துக் கலைஞர்கட்கும்,
* மலருக்கான விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும்,
* மலரை அச்சுபதித்த விகடன் அச்சகத்தினருக்கும்,
* ஒலி - ஒளி அமைப்பாளர்கட்கும்,
* விழா நடாத்த சலுகைக் கட்டணத்தில் சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவிய இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினருக்கும்,
* ஊடக அனுசரணை வழங்கிய சூரியன் பண்பலை வானொலி நிலையத்தினருக்கும்,
* மற்றும் இம் முத்தமிழ் விழா சிறப்புறச் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும்,
* வருகைதந்து சிறப்பித்த உங்களுக்கும்,

## *எமது இதயம் கனிந்த நன்றிகள் !*

### விழா - மலர்க்குழு

*யா/வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம்*
*பழைய மாணவர் சங்கம் - கொழும்பு*

## எமது இனிய

# வாழ்த்துக்கள்

திருமணத்திற்குத் தேவையான
வைரத்தாலிக் கொடி முதல் வைரமூக்குத்தி வரை
வண்ண வண்ண வடிவங்களில்
வவுனியா, யாழ்ப்பாணம்,
கொழும்பில் பெற்றுக் கொள்ள நம்பிக்கை,
நாணயம், தரச்சிறப்பு நிறைந்த
ஒரே ஸ்தாபனம்




# விக்னேஸ்வரா நகைப்பூங்கா

Wigneswara Nakai Poonka
457, Galle Road, Wellawatta,, Colombo - 06
T.P : 011-2559535

**34-D,10-B Kanthasamy Kovil Road, Vavuniya**
**T.P : 024-2221910, 024-2221857**

205/3, Kasthuriar Road, Jaffna
T.P : 0214590022

எமது இனிய நல் வாழ்த்துக்கள்

உள்நாட்டு உணவுப் பொருட்கள்

உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியாளர்களும்




MAHARAJA FOOD PRODUCT

18/3, DR.E.A.COORAY MAWATHA, COLOMBO - 06, SRI LANKA

Tel : 2559849, 2360926

Fax : 2361139

Vihadan Printer, 541/2Galle Road, Colombo -06. T.P :2361329